Registered as a News paper in Sri Lanka

# ஈழநாதம்

THE EELANAATHAM

மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஆ வைகாசி மீ 6 ஆம் உ ஞாயிற்றுக்கிழமை (20 - 05 - 1990) ஹிஜ்ரி 1410 ஷவ்வா 24 ஓசை 91

## சிராவஸ்தியில் ஈ. பி. ஆர். எல். எவ். எம். பிக்களுக்கு தீவிர பாதுகாப்பு!

(கொழும்பு)

கொழும்பில் பாராளுமன்ற உறுப்பினரின் வாசஸ்தலமான சிராவஸ்தியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் கடந்தசில தினங்களாகப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஈ. பி. ஆர். எல். எவ். பாராளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்புக் கருதியே இப் பந்தோபஸ்து நடவடிக்கை என்றுமில்லாத வகையில் பலப்படுத்தப்பட்டுள்ளதாம். இதற்கென விசேட இராணுவப் பிரிவொன்று பாராளுமன்றத்தில் நிரந்தரமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு சர்வகட்சி மாநாட்டை விடுதலைப்புலிகள் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

நேற்று கொழும்பில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டை விடுதலைப் புலிகள் இயக்கம் பகிஷ்கரித்தது ஸ்ரீலங்கா அரசு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் உத்தியோக பூர்வமாக பேச்சுக்களை நடத்திவருவதையும் சர்வகட்சி மாநாட்டிற்கு முக்கியத்துவம் அளிப்பதையும் ஆட்சேபித்தே விடுதலைப் புலிகள் இத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிகிறது சர்வகட்சி மாநாட்டில் இதுவரை காலமும் விடுதலைப் புலிப் பிரதி நிதிகள் பார்வையாளர்களாகப் பங்குபற்றி வந்தனர்,

ஜனாதிபதி பிரேமதாசாவினால் ஆரம்பித்துவைக்கப்பட்ட சர்வகட்சி மாநாட்டில் செயலிழந்ததும், மக்களால் ஒதுக்கப் பட்டதுமான பல்வேறு, தமிழ் கட்சிகளும் குழுக்களும் பங்குபற்றி வந்தன. தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சினை பற்றி பேசுவதற்கோ அல்லது இனப் பிரச்சினை குறித்து தீர்மானங்களை எடுப்பதற்கோ இம்மாநாட்டில் பங்கு பற்றி வரும் கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் எவ்விதஅந்தஸ்தோ அருகதையோஇல்லை என்பது தான் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடாகும் ஸ்ரீலங்கா அரசு விடுதலைப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## அரிசிமூடைகளில் விலை, தரம் குறிப்பிட அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

அரிசி ஆலை உரிமையாளர்கள் தாம் விற்கும் அரிசி மூடைகளில் அந்த அரிசியின் தரம், விலை, நிறை, ஆலையின் விபரம் போன்றவற்றை எழுத வேண்டும் என உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி உத்தரவிட்டுள்ளார்.

அரிசியில் மணல் கலக்கப்படுவதாக பொதுமக்கள் தெரிவித்தபுகார்களையடுத்து சில கடைகளில் உள்ள அரிசி மூடைகள் சோதனையிடப்பட்டன.

அப்போது ஒரு மூடை அரிசியில் ஐந்து கிலோ மணல் கலக்கப்பட்டுள்ளது கண்டு பிடிக்கப்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சமாதான நீதிவான்கள் இன்மையால் மக்கள் அவதி

சமாதான நீதிவான்கள் இன்றி வடக்கு கிழக்கு பகுதிகளிலுள்ள பலர் தமது முக்கிய ஆவணங்களுக்காக அங்கும் இங்கும் அலைந்து திரிகின்றனர்.

புனர்வாழ்வு மற்றும் தேவைகளுக்கும் சத்தியக் கடதாசி போன்றவற்றுக்கும் பாஸ்போர்ட் விண்ணப்பத்திற்கும் இந்த சமாதான நீதிவான்களின் கையொப்பம் தேவைப்படுகின்றது.

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளினால் பல சமாதான நீதிவான்கள் நாட்டை விட்டுச் சென்றுள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## நாளைய ஹர்த்தாலுக்கு ஈரோஸ் பூரண ஆதரவு!

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினால் நாளை ஏற் பேரை இந்தியாவிற்கு நாடு கடத்த அரசு எடுக்கும் தீவிர

தமிழ் - முஸ்லிம் மக்கள்

## குரோதங்களை மறந்து இனியாவது ஒற்றுமையாக வாழ வேண்டும்

''எமக்கிடையே உள்ள எல்லாவிதமான குரோதங்களையும் மறந்து தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாகச் செயலாற்ற முன் வரவேண்டும்.'' இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. யோகரட்ணம், யோகி அண்மையில் மூதூர் முஸ்லிம் வித்தியாலயத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசும் போது கூறினார்.

''தமிழ் பேசும் மக்களை இன்று உலகம் ஒரு தேசிய இனமாக அங்கீகரித்திக்கிறது.

ஒருதேசிய இனத்திற்கு பாரம்பரியமாக வாழ்ந்த ஒரு மண் இருக்கவேண்டும். தனித்துவமான ஒரு மொழி

(6ஆம் பக்கம் பார்க்க)

## நீண்ட காலத்தின் பின் வடக்கு - கிழக்கில் மலையக மக்களுக்கு ஆதரவாக ஹர்த்தால்

## மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு ரூபா 50லட்சம் ஒதுக்கீடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொது வைத்தியசாலையின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக நோராட் நிறுவனம் மேலும் 50 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது என்று மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு, ஆர். யோகநாதன் தெரிவித்தார். ஏற்கனவே புனரமைப்புக்கு 17 லட்சம் ரூபாவை நோராட் நிறுவனம் வழங்கியுள்ளது.

மேலும் வழங்கவிருக்கும் 50 லட்சம் ரூபா நிதி மூலம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஒப்பந்தகாரருக்கு ஐந்து மாதகால அவகாசம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செயலக நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்ய ஒப்பந்தகாரருக்கு ஊக்குவிப்புக்களுடன் ஐந்துமாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ஆர். யோகநாதன் கூறினார்.

மேற்படி செயலக வேலைகள் தொடர் நோராட் நிறுவனம் 59 லட்சம் ரூபாவை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

தற்போது நடைபெற்று வரும் வேலைகளில் எதிர்வரும் ஜூலை 31ஆம்திகதிக்குமுன்பு

(6ஆம் பக்கம் பார்க்க)

## வெங்காயம், பருப்பு இறக்குமதி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் வெங்காயம், பருப்பு போன்ற உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் வெளிநாடுகளுக்கு அவசர கொள்வனவு கட்டளைகளை அனுப்பியுள்ளது.

இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் போதியளவு வெங்காயமும், பருப்பும் வந்து சேரும் எனவும் ஸ்தாபன உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவை வந்து சேர்ந்ததும் நாடு முழுவதும் விநியோகிக்கப்படும் எனவும் அவர் மேலும் சொன்னார்.

## ஜோலிஸ்ரார் ஜோனியன்ஸ் கால்,இறுதி ஆட்டங்களில்வெற்றி

(யாழ்ப்பாணம்)

ஜொலிஸ்ரார் நடத்தும் ஷப்ரா கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற கால் இறுதி ஆட்டங்களில் ஒன்றில் ஜொலிஸ்ரார் அணியும் மற்றொன்றில் ஜொனியன்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 30 ஓவர்களில் 149 ஓட்டங்களைப் பெற்றது. இதற்கு பதில் அளித்தாடிய கிராஸ்கொப்பர்ஸ் அணி 215 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 125 ஓட்டங்களை மட்

## இன்மையால் மக்கள் அவதி

சமாதான நீதிவான்கள் இன்றி வடக்கு கிழக்கு பகுதிகளிலுள்ள பலர் தமது முக்கிய ஆவணங்களுக்காக அங்கும் இங்கும் அலைந்து திரிகின்றனர்.

புனர்வாழ்வு மற்றும் தேவைகளுக்கும் சத்தியக் கடதாசி போன்றவற்றுக்கும் பாஸ்போர்ட் விண்ணப்பத்திற்கும் இந்த சமாதான நீதிவான்களின் கையொப்பம் தேவைப்படுகின்றது.

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளினால் பல சமாதான நீதிவான்கள் நாட்டை விட்டுச் சென்றுள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## நாளைய ஹர்த்தாலுக்கு ஈரோஸ் பூரண ஆதரவு!

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினால் நாளை ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஹர்த்தாலுக்கு ஈழவர் ஜனநாயக முன்னணியும் ஆதரவு தெரிவித்துள்ளது.

ஈழவர் ஜனநாயக முன்னணி ஆதரவு தெரிவித்து விடுத்த அறிக்கையில் மலையகத்திலிருந்து சுமார் ஒரு லட்சம் பேரை இந்தியாவிற்கு நாடு கடத்த அரசு எடுக்கும் தீவிர நடவடிக்கைகளுக்கு எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு மலையக மக்களை நாடு கடத்த எடுக்கும் முயற்சிக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசி இல்லாததால் ரயில்நேரத்திற்கு பஸ் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கும் யாழ். ரயில் நிலையத்துக்கும் இடையே தொலைபேசி இணைப்பு பொருத்தப்படவில்லை.

இதனால் ரயில்வரும் நேரங்களை பஸ் நிலையப்பொறுப்பதிகாரி அறிந்து கொண்டு நேரத்துக்கு பஸ்களை ரயில் நிலையத்துக்கு அனுப்பிவைக்க முடியவில்லை.

இப் பிரச்சினையால் ரயில் வரும் நேரங்களில் பஸ்கள் ரயில் நிலையத்தில் நிற்பதில்லை.

இந்த தொலைபேசிச் சீர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்டவர்களுக்கு பயிலுநர் ஆசிரியர் நியமனம்

(மட்டக்களப்பு)

அசம்பாவிதங்கள், வன்செயல்களில் பிரதான உழைப்பாளிகளை இழந்துள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு ஆசிரிய பயிலுநர் நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை கல்விச்சேவை ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

ஏற்கனவே ஆசிரியர் பயிலுநர் பதவிக்கு விண்ணப்பம் செய்து நேர்முகப்பரீட்சையில் கலந்து கொண்டு தெரிவு செய்யப்படாதவர்களிடமிருந்து இவ்விபரம் திரட்டப்படுகிறது.

இவற்றை அந்தந்தப்பகுதி உதவி அரச அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

# துரோதங்களை மறந்து இனியாவது ஒற்றுமையாக வாழ வேண்டும்

''எமக்கிடையே உள்ள எல்லாவிதமான துரோதங்களையும் மறந்து தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாகச் செயலாற்ற முன் வரவேண்டும்.'' இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. யோகரட்ணம், யோகி அண்மையில் மூதூர் முஸ்லிம் வித்தியாலயத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசும்போது கூறினார்.

''தமிழ் பேசும் மக்களை இன்று உலகம் ஒரு தேசிய இனமாக அங்கீகரித்திக்கிறது.

ஒருதேசிய இனத்திற்கு பாரம்பரியமாக வாழ்ந்த ஒரு மண் இருக்கவேண்டும். தனித்துவமான ஒரு மொழி

(6ஆம் பக்கம் பார்க்க)

## நீண்ட காலத்தின் பின் வடக்கு-கிழக்கில் மலையக மக்களுக்கு ஆதரவாக ஹர்த்தால்

(யாழ்ப்பாணம்)

காலாவதியான இலங்கை-இந்திய ஒப்பந்தப் பிரகாரம் இந்திய வம்சாவழியினரான மலையகத் தோட்டத் தொழிலாளர்களை வெளியேற்றுவது தொடர்பாக மலையகத்தில் ஏற்பட்டுள்ள எழுச்சியை அடக்குவதற்கு அரசாங்கம் பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் மக்களைத் துன்புறுத்தியும், கைது செய்தும் வருவதைக் கண்டித்து வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நாளைய தினம் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

மிக நீண்டகால இடைவெளிக்குப் பிறகு வடக்கு, கிழக்கு மக்கள் மலையகத் தோட்டத் தொழிலாளருக்கு ஆதரவாக நடத்தவிருக்கும் இந்த ஹர்த்தாலின் மூலம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தீவுப்பகுதியிலும் வேவுவிமானம்

(புங்குடுதீவு)

கடந்த 18ஆம் திகதி பிற்பகல் தீவுப்பகுதியினை சுற்றி ஒரு சீ-பிளேன் நோட்டமிட்டுச் சென்றது. நீண்ட நாட்களின் பின்னர் சென்ற இப் பிளேனை தீவுப்பகுதி மக்கள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## முள்ளிக்குளத்தில் இன்று வீரவேங்கைகள் விழா

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள முள்ளிக்குளம் என்ற இடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை வீரவேங்கை லெப்டினன்ட் கேணல் ராதா மற்றும் வீரவேங்கைகளின் நினைவஞ்சலி விழா நடைபெறவுள்ளது.

இங்கே இவர்கள் ஞாபகார்த்தமாக மண்டபம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. இதன் மத்தியில் வீரவேங்கை ராதாவின் அமைப்பும், அவரைச் சுற்றி வீரவேங்கைகள் நிற்பதும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வைபவத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. செபநாயகம் உட்பட மன்னார் மாவட்ட விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களும் கலந்து கொள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஜொலிஸ்ரார் ஜொனியன்ஸ் கால், இறுதி ஆட்டங்களில்வெற்றி

மொத்த விற்பனவு ஸ்தாபனம் வெளிநாடுகளுக்கு அவசர கொள்வனவு கட்டளைகளை அனுப்பியுள்ளது.

இம்மாதம் 31 ஆம் திகதிக்கு இவை வந்து சேர்ந்ததும் நாடு முழுவதும் விநியோகிக்கப்படும் எனவும் அவர் மேலும் சொன்னார்.

(யாழ்ப்பாணம்)

ஜொலிஸ்ரார் நடத்தும் ஷப்ரா கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற கால் இறுதி ஆட்டங்களில் ஒன்றில் ஜொலிஸ்ரார் அணியும் மற்றொன்றில் ஜொனியன்ஸ் அணியும் வெற்றி பெற்றன.

நேற்றுக் காலை இந்துக் கல்லூரி மைதானத்தில் ஜொலிஸ்ரார் அணிக்கும் கிறாஸ் கொப்பர்ஸ் அணிக்கும் இடையில் நடந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 30 ஓவர்களில் 149 ஓட்டங்களைப் பெற்றது. இதற்கு பதில் அளித்தாடிய கிராஸ்கொப்பர்ஸ் அணி 215 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 125 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இரண்டாவது கால் இறுதிப்போட்டியில் ஜொனியன்ஸ் அணியும் ஒல்கோல்ட் அணியும் போட்டியிட்டன


(6ஆம் பக்கம் பார்க்க)

### 6வது திருத்தச்சட்ட நீக்கம்; வட-கிழக்கு மாகாணசபை கலைப்பு

# பிரபா - பாலகுமார் 2½ மணிநேர பேச்சு



தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் ஈரோஸ் இயக்கத் தலைவர் வே. பாலகுமா



ரனும் நேற்று யாழ்ப்பாணத்தில் சந்தித்து முக்கியமான பிரச்சினைகள் சம்பந்தமாக சுமார் இரண்டரை மணிநேரம் கலந்தாலோசனை செய்தனர்.

இலங்கை அரசியல் அமைப்பின் ஆறாவது திருத்தச்சட்டத்தை நீக்குவதற்கு ஈரோஸின் அரசியல் பிரிவான ஈழவர் முன்னணி பாராளுமன்றத்தில் கொண்டுவர விருக்கும் தனிப்பட்ட உறுப்பினர் பிரேரணை சம்பந்தமாகவும் அதனால் ஏற்படுத்தக்கூடிய அரசியல் விளைவுகள் பற்றியும் இருவரும் விவாதித்ததாகவும் வடக்கு, கிழக்கு மாகாண சபையைக் கலைப்பது சம்பந்தமான பிரச்சினைகள் பற்றியும் அடுத்து அரசு இதுசம்பந்தமாகக் கடைப்பிடிக்கும் அசமந்த போக்கு சம்பந்தமாகவும் இருவரும் பேசினார்கள்.

திரு. பிரபாகரனும், திரு. பாலகுமாரனும் நட்புறவுடனும் சுமுகமான சூழ்நிலையிலும் பேச்சுவார்த்தை நடத்தினர். இன்றைய அரசியல் சூழ்நிலை, எதிர்கால நிலைமை பற்றியும் இருவரும் பேசிக் கொண்டதாகவும் தெரியவருகிறது.

### 75 வீத மக்கள் சொந்த இடத்திற்குத் திரும்பியுள்ளனர்

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களில் வாழ்ந்த மக்களில் 75 வீதமானோர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர். தற்காலிக குடிசைகளை அமைத்து அவற்றில் மக்கள் குடியேறியுள்ளனர். விரைவில் இவர்களுக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

# தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் முடிவு

(தலவாக்கொல்லை)

### உண்ணாவிரதம் நீடிக்கிறது

கைதுசெய்து பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள மலையக முன்னணித் தலைவர் சந்திரசேகரன்அடுத்த திங்கட்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுப் பிணையில் செல்ல அனுமதிக்கப் படுவாரென்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே சமயம் சந்திரசேகரனை விடுதலை செய்யக் கோரி பதினான்கு தோட்டங்களில் பத்தாயிரம் தொழிலாளர்கள் கடந்த சில தினங்களாக மேற்கொண்டிருந்த வேலை நிறுத்தம் பொலிஸார் அளித்த வாக்குறுதியை தொடர்ந்து கைவிடப்பட்டது

ஆனாலும் தலவாக்கொல்லை ஸ்ரீ கதிரேசன் கோயில் முன்பாகவும்அட்டன் மாரியம்மன் கோயில் முன்பாகவும் கடந்த இருதினங்களாக உண்ணாவிரதமிருந்து வருப

(6ஆம் பக்கம் பார்க்க)

# மதவாச்சியிலிருந்து வவுனியாவிற்கு சமாதான யாத்திரை

(வவுனியா)

இன்று இருபதாம் திகதி ஞாயிற்றுக்கிழமை வடமேல் மாகாணசபை உறுப்பினர் நிஸங்க திசநாயக தலைமையில் சுமார் ஆறாயிரம் பேர் கொண்ட மக்கள் மதவாச்சியிலிருந்து வவுனியாவிற்கு சமாதான யாத்திரை மேற்கொள்ளவுள்ளனர்.

மதவாச்சி நகரத்தில் 6.30 மணியளவில் ஆரம்பமாகும் இப்பாத யாத்திரை பகல் 12.00 மணியளவில் வவுனியா வந்ததடையும் என எதிர்பார்க்சப்படுகிறது.

இந்த யாத்திரைக்கு விடுதலைப்புலிகளின் அனுமதி வழங்கப்பட்டதையடுத்து, புலிகளே, யாத்திரையில் பங்கு கொள்ளும் மக்களுக்கான பாதுகாப்பை வவுனியாவில். வழங்கவுள்ளனர்.

சகலஇன மக்களின்ஐக்கியத்திற்காகவும், சகோதரத்துவத்திற்காகவும், சமாதானத்திற்காகவும் இந்தயாத்திரை மேற்கொள்ளப்படுவதாக வடமேல் மாகாண சபை உறுப்பினர்

(6ஆம் பக்கம் பார்க்க)

குமணக் காட்டில்

# பாதுகாப்புப் படையினர் திருப்பி அனுப்பப்பட்டனர்

(கொழும்பு)

குமணக் காட்டில் பன்னிரெண்டு யானைகள் கொல்லப்பட்டது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளச் சென்ற பொலிஸ்சும் இராணுவத்தினரும் கடந்த புதனன்று இனந்தெரியாத போராளிக் குழு ஒன்றினால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

ஸ்ரீலங்கா பாதுகாப்புப்படையினர் போராளிக் குழுக்களினால் திருப்பியனுப்படுவது இது இரண்டாவது தடவையாகும்

கடந்த செவ்வாய றுபன்னிரெண்டு யானைகளின் சடலங்களைக் கிராமவாசிகள் கண்டெடுத்ததைத் தொடர்ந்து குமண-பமண றோட்டுக்கு விரைந்த பொலிஸ் கோஷ்டியினர் மேற்கொண்டு முன்னேறாமல் தடுத்துத் திருப்பி அனுப்பட்டனர்.

இப் பகுதி பாதுகாப்பு அதிகாரிகள் இது தொடர்பாக கவலை கொண்டிருப்பதோடு கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா உயர் பாதுகாப்பு வட்டாரங்களுக்கும் அறிவித்துள்ளனர்.

இறந்த 12 யானைகளில் இரண்டு தந்தங்களுடைய யானைகளென்றும், யானைகளைக் கொன்றவர் பற்றிய விபரங்கள் எதுவும் தெரியாது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

விசாரணைகள் நடைபெறுகினறன.

# ஊழியர் சேமலாப நிதிக்குப் பணம் செலுத்தாத முதலாளிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதிக்கு கொடுப்பனவுகள் செலுத்தாத வேலை கொள்வோர் முதலாளிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தொழில்,தொழில் பயிற்சி அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா நேற்று முன்தினம் தொழில் அமைச்சில் நடைபெற்ற மாநாட்டில் கூறினார்.

தேசிய சம்பள ஆணைக்குழு விரைவில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவினால் நியமிக்கப்படவுள்ளது எனவும் அமைச்சர் பிரேமச்சந்திரா தெவீத்தார்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதால் அதற்கேற்ப ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாடசாலைகளிலிருந்து வெளியேறிய மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்கவும் தனியான அதிகார சபை ஒன்றும் நிறுவப்படவுள்ளது.

அடுத்த மேதினத்துக்கு முன்னர் தொழிலாளர்களின் சேம நலன்களைப் பேணும் வகையில் புதிய தொழிற்சாஸனம் ஒன்று வகுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

---

யானைகளைக் கொன்றவர்கள் யார் என்பதைக் கண்டுபிடிக்க சகல முயற்சிகளும் மேற்கொள்ளபபட்டுவருவதாக பொலிஸ் மா அதிர் ஏணெஸ்ட்பெரேரா கூறினார்.

இப் பிரதேசத்தில் ஒரு தமிழ் போராளிக் குழு இருப்பது எமக்குத் தெரியும். காட்டு யானைகள் வன விலங்குகள் பாதுகாப்புக்கென ஒதுக்கப்பட்ட சரணாலயப் பகுதியில் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் அமைச்சரவை வாராந்தப் பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

# யாழ்நகரில் இன்றைய சினிமா

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2–30. 4-00, 6.30 & 9.30
**BRUCE LEE IN BRUCELEE THELEGEND**
கராட்டிப் படம்

**வெலிங்டன் (யாழ்)**
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30,2-30, 6-30,9-30
**நிலவே மலரே**
(புதிய பிரதி)
B/859

**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 7.00, 9.30
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
ஜெய்சங்கர் R.R. விஜயா
அசோகன் நாகேஸ்
V. K. ராமசாமி
தேங்காய் சீனிவாசன்
சுருளிராஜன்
நடித்த
**திருடி**
B 878

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**ராஜா (யாழ்)**
தினசரி 4·45, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·00, 2·00, 4·45, 7:00, 9·45
இன்று
Terence Hill Bud Spencer
**I AM FOR THE HIPPOPOTAMUS**

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.00, 6.30
7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00
7-30 9-00
**UNMASKING THE IDOL**
(Color)

**லிடோ (யாழ்)**
18 முதல் 21 வரை
Daily at. 4. P.M 6.30 & 9.30 P.M.
Sat &Sun&Pudlice Hoiiday
10.30 2.30 4.30 6.30 9.30
**CAN BE DONE AMIGO**
(color).
அடுத்த வெளிமீடு
மாவீரன்
(புதிய பிரதி)

**ஸ்ரீதர் - (யாழ்.)**
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விசேஷ விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
10.30, 2 30, 6.30, 9.30
ரஜனி,ராதிகா, ரகுவரன்
நடித்த
**ஊர்க்காவலன்**
50-வது நாளை நோக்கி9
B/96

# நினைவு அஞ்சலிகள்



லெப். கிறிஸ்டி
பேச்சிமுத்து
வீரமரணம்
29-12-86



லெப. கேணல்
ராதா
வீரமரணம்
20-05-1987



லெப். இனபம
ஜெகசீலன் கிருஸ்ணன்
வீரமரணம்
20-04-1989

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த வீர வேங்கைகள் மூவருக்கும் ஐயனார் கோயிலடி சனசமுக நிலைய முன்றலில் இன்று 20-05-1990 மாலை 5-30 மணியளவில் ஞாபகார்த்த வைபவம் இடம் பெறவுள்ளது. இவர்களுக்கு எமது வீரவணக்கமும் வீர அஞ்சலியும்.

வண்ணார் பண்ணை
வாழ்மக்கள்.

(B 981)

# பருத்தித்துறை நகரை மறுசீரமைக்க குழு

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் கடந்த காலங்களில் இலங்கை இராணுவம், இந்திய ஆக்கிரமிப்பு இராணுவங்களின் அட்டூழியங்கள், கெடுபிடிகளால் சீரழிக்கப்பட்டு யுத்த சின்னங்களாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கும் பருத்தித்துறை நகரத்தை மறுசீரமைத்து நவீனமுறையில் நகரை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளுக்கென தமிழீழவிடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி பருத்தித்துறை நகர மறுசீரமைப்புக் குழுவொன்றை அமைத்துள்ளது.

பருத்தித்துறையில் நடைபெற உத்தேசிக்கப்படும் சகல நகர மறுசீரமைப்பு வேலைகளும் திட்டங்களும் இம்மறுசீரமைப்புக்குழுவின் கலந்தாலோசனையின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை நகர மறுசீரமைப்புக்குழுவின் உறுப்பினர்களின் விபரங்களையும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் அறிவித்துள்ளனர்.

இம் மறுசீரமைப்பு குழுவுடனான சகல தொடர்புகளுக்கும் ''பருத்தித்துறை நகரமறுசீரமைப்புகுழு மேற்பார்த்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் காரியாலயம் வடமராட்சி செயலகம், பருத்தித்துறை என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறுசீரமைப்புக் குழு உறுப்பினர்கள் பற்றிய விபரம்.

திரு.சோ இராசேந்திரம் திரு செவிசாகசுந்தரம், திரு.ஆ.நடராஜா, திரு. சொ. தவராஜா திரு. வை. சண்முகநாதன் திரு.சி.சிவகுரு, திரு.க சண்முகநாதன். (பருத்தித்துறை நகரசபை செயலாளர் (25)

## பாடசாலைக் கட்டிடம் கட்டப் படவில்லை

(வந்தாறுமூலை)

1989 ஆம் ஆண்டு சித்தாண்டி ராமகிருஷ்ண மிசன் பாடசாலைக்கு தேவையான கட்டிடம் ஒன்றை கட்டுவதற்கு கல்வித்திணைக்களம் மூலம் கட்டிட ஒப்பந்தகாரருக்கு நிதி ஒதுக்கப்பட்டது.

ஆனால் 1989 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரையும் எதுவிதமான கட்டிடமும் கட்டிமுடிக்கபடவில்லை அத்துடன் கல்வித்திணைக்கழமோ, அல்லது வேறு அதிகாரிகளோ இது பற்றி நடவடிக்கை மேற்கொள்ளவும் இல்லை.


எனவே இது தொடர்பாக கல்வித்திணைக்களம் உரிய நடவடிக்கை எடுத்து மேற்படி பாடசாலைக்குரிய கட்டிடத்தை அமைக்க வேண்டுமென இப்பகுதி மக்களும் இப்பாடசாலைப் பெற்றோரும் பழையமாணவரும் வேண்டுகின்றனர்.

# மினிபஸ் விபத்து

(வவுனியா)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த மினிபஸ் குடைசாய்ந்ததில் சிலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் சு.சிவகுருநாதன் (வயது30) என்பவர் வவுனியா அரசாங்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு இச்சம்பவம் இடம்பெற்றது. குறிப்பிட்ட பகுதிகளில் கடந்தசில மாதங்களாக கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (தி)

உங்கள் வீட்டு நிர்மாண வேலைகளுக்கு



29-12-86 | 20-05-1987 | 20-04-1989

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த வீர வேங்கைகள் மூவருக்கும் ஐயனார் கோயிலடி சனசமூக நிலைய முன்றலில் இன்று 20-05-1990 மாலை 5-30 மணியளவில் ஞாபகார்த்த வைபவம் இடம் பெறவுள்ளது. இவர்களுக்கு எமது வீரவணக்கமும் வீர அஞ்சலியும்.

வண்ணார் பண்ணை
வாழ்மக்கள்.

(B 981)

லைப்புலிகள் மக்கள் முன்னணியினர் அறிவித்துள்ளனர் இம் மறுசீரமைப்பு குழுவுடனான சகல தொடர்புகளுக்கும்''பருத்தித்துறை நகரமறுசீரமைப்புகுழு மேற்பார்த்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் காரியாலயம் வடமராட்சி செயலகம், பருத்தித்துறை என்ற விலாசத்துடன்

வடிக்கை மேற்கொள்ளவும் இல்லை.

எனவே இது தொடர்பாக கல்வித்திணைக்களம் உரிய நடவடிக்கை எடுத்து மேற்படி பாடசாலைக்குரிய கட்டிடத்தை அமைக்க வேண்டுமென இப்பகுதி மக்களும் இப்பாடசாலைப் பெற்றோரும் பழையமாணவரும் வேண்டுகின்றனர்.


## மினிபஸ் விபத்து

(வவுனியா)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த மினிபஸ் குடைசாய்ந்ததில் சிலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் சு.சிவகுருநாதன் (வயது30) என்பவர் வவுனியா அரசாங்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு இச்சம்பவம் இடம்பெற்றது. குறிப்பிட்ட பகுதிகளில் கடந்தசில மாதங்களாக கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (தி)

உங்கள் வீட்டு நிர்மாண வேலைகளுக்கு

## எங்கள் ஆலோசனைகள்....



அங்கீகாரம்பெற்ற கட்டிட படவரைஞர்
கட்டிட ஆலோசகர்
கட்டிட ஒப்பந்தக்காரர்
கட்டிட பொருள் விற்பனையாளர்

## இவற்றுடன்

- கொங்கிறீட் கற்கள்
- பூச்சாடிகள்
- கிறில்கற்கள்
- மணல்
- சல்லி
- பூச்சுமணல்

இவை அனைத்தும் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

விபரங்களுக்கு:

AB — REGISTERED TRADE MARK

## AMBAL BUILDERS

(MALAI MAGAL ILLAM)

No. 20, New Road, Athiyady, Jaffna.

B-947

# அமெரிக்க-சோவியத் உயர்சந்திப்பில் உடன்படிக்கை கைச்சாத்தாகாது

(மொஸ்கோ)

அமெரிக்க, சோவியத் ஜனாதிபதிகள் இம்மாத இறுதியில் நடத்தும் உயர் நிலை மகா நாட்டின் போது கேந்திர முக்கியத்துவம் மிக்க ஆயுதக் குறைப்புப் பற்றிய உடன்படிக்கை தயாராக இருக்க மாட்டாது என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உயர் நிலை மகா நாட்டிற்கு முன்னர் இந்த முட்டுக் கட்டையை தீர்க்கும் முகமாக மொஸ்கோவில் ஜனாதிபதி கொர்பசேவும் இராஜாங்க அமைச்சர் ஜேம்ஸ் பேகரும் ஐந்து மணி நேரம் பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சரை சந்திக்க முன்னர் நிருபர்களை சந்தித்த ஜனாதிபதி கொர்பசேவ் மே மாத முடிவில் தமக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஷ்புஷ்க்கும் இடையில் நடைபெறும் சந்திப்பின் போது "ராக" உடன்படிக்கை தயாராக இல்லாமல் இருக்கலாம் என்று எச்சரித்திருக்கிறார்.

கடலில் இருந்தும் வானில் இருந்தும் அனுப்பப்படக் கூடிய ஏவுகணைகள் பற்றி உடன்பாடு ஏற்படுவதில் முட்டுக் கட்டை காணப்படுகிறது. ஆனாலும் இந்த முட்டுக் கட்டையை விலக்கி முரண்பாடுகளை அகற்றும் முயற்சிகள் தொடர்ந்து இடம் பெற்று வருவதாக கொர்பசேவ் கூறினார்.

சோவியத் தரப்பில் நம்பிக்கை தரப்பட்டாலும் அமெரிக்கா தரப்பில் சந்தேகங்களே எழும்பியிருக்சின்றன. உடன்படிக்கை உருவாகாமல் உயர் நிலை மகா நாடு ஒன்று நடத்தப்படுவது இது மூன்றாவது தடவை என்று கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஜனாதிபதி நிக்ஸனுடன் ஒரு வருடத்திற்கு முன்னர் நடந்த மகா நாட்டிலும் கடந்த வருடம் மோல்ராவில் நடத்தப்பட்ட ஜோர்ஜ்புஷ் கொர்பசேவ் மகா நாட்டிலும் கூட இந்த அணு ஆயுத உடன்படிக்கை தோல்வியில் முடிந்தமை குறிப்பிடத்தக்கது. எனவே தான் இப்பேச்சு வார்த்தை சம்பந்தமாக தாம் சந்தேகப்படுவதாக அமெரிக்கத் தரப்பினர் குறிப்பிட்டிருக்கின்றனர்.

எனவே இந்த வேறுபாட்டை அகற்ற எப்படியாவது திருப்திகரமான உடன்படிக்கையை ஏற்படுத்த இருதரப்பு உயர் அதிகாரிகளும் முயல்கின்றனர்.

இவ் உடன் படிக்கை பற்றி பேச்சு வார்த்தை நடத்த வந்த ஜேம்ஸ் பேகர் அவசியம் ஏற்பட்டால் தனது மொஸ்கோ விஜயத்தை இன்னும் இரண்டு தினங்களுக்கு நீடிக்கவும் தயார் எனவும் கூறியிருக்கிறார்.

## எட்டேகால்கோடி டாலருக்கு ஓவியம் ஏலம்!

(நியூயோர்க்)

வின்சன்ட் வேன் கொக் வரைந்த ஓவியம் ஒன்று நியூயோர்க் கிறிஸ்டி ஏலத்தில் 8 கோடி 55 லட்சம் டாலருக்கு விற்பனை செய்யப்பட்டது. இது ஒரு உலக சாதனையாகும்.

1891ஆம் ஆண்டு வேன் கொக் தற்கொலை செய்து கொள்வதற்கு ஆறு வாரங்களுக்கு முன்பு இவ் உருவப்படத்தை வரைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப் படத்தை வாங்கியவர் ஒரு ஜப்பானியர் ஆவார். இதற்கு முற்பட்ட உலக சாதனையும் வேன் கொக்கின் ஓவியமே பெற்றிருந்தது. "ஐரிஸின்" என்ற அவரது அந்த ஓவியம் 1987ஆம் ஆண்டில் 5 கோடியே 39 லட்சம் டாலருக்கு விற்கப்பட்டது.

அதே வேளை வேன் கொக்கின் புதிய உலக சாதனைகள் ஏலச்சந்தையை திகைப்புக்குள்ளாக்கியது.

## களவுப் பொருட்கள் மீட்கப்பட்டன

யாழ்-பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் திருட்டுப் போன தண்ணீர் இறைக்கும் இயந்திரம், வயலின், கோஸ்பைப் என்பன மீட்கப்பட்டுள்ளன.

பாடசாலை அயலில் வாழ்கின்ற பொதுமக்கள் மேற்படி பொருட்களை திருடியவரிடம் இருந்து மீட்டுத்திரும்பவும்பாடசாலை அதிபரிடம் ஒப்படைத்திருப்பதாக வித்தியாலய அதிபர் திரு.க, கனகசிங்கம் தெரிவித்தார். (21)

## மேற்கு கிழக்கு ஜேர்மனி ஒப்பந்தம் கைச்சாத்து

(பொண்)

கிழக்கு ஜேர்மனிக்கும், மேற்கு ஜேர்மனிக்கும் இடையில் சமூக பொர்ருளாதார ஐக்கியம் மற்றும் நாணயப் புழக்கம் பற்றிய உடன்படிக்கை கடந்த வெள்ளிக்கிழமை கைச்சாத்திடப் பட்டது.

இவ்வுடன் படிக்கையில் இரு நிதியமைச்சர்களும் கைச்சாத்திட்டுள்ளனர். அதே வேளை இரு ஜேர்மனிகளின் தலைவர்களும் "கட்டுப்பாடற்ற ஜர்கியமான புதியதோர் ஜேக்மனி இன்று உதயமாகிறது" என்று விபரித்து வரவேற்றிருக்கின்றனர்.

வரும் யூலைமாதம் தொடக்கம் மேற்கு ஜேர்மனியின் நாணயங்களும். சட்டுப்பாடற்ற வர்த்தகச்சலுகைமுறையும் கிழக்கு ஜேர்மனிக்குள் அறிமுகம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

## யுனெஸ்கோ கிளப்பில் சோவியத் சேருகிறது

(பரிஸ்)

யுனெஸ்கோ கிளப்பில் 97ஆவது நாடாக சோவியத் யூனியன் சமீபத்தில் சேர்ந்து கொண்டது.

அறிவால் இத் துறையில் பல சாதனைகளை ஏற்படுத்துவதே இந்த அமைப்பின் குறிக்கோளாகும்,

கஸாக்ஸ்தானில் செயல்படும் இந்த கிளப்பின் ஒரு கிளை சூழல் சுற்றாடல் விடயங்களில் முக்கிய கவனம் செலுத்துகிறது.

## தென்பசுபிக் போகன்விலி சுதந்திரப் பிரகடனம்

(சிட்னி)

தென் பசுபிக் தீவான போகன்விலிசியைச் சேர்ந்த போராளிகள் யாரும் எதிர்பாராத வகையில், நேற்று முன்தினம் தன்னிச்சையாகச் சுதந்திரப் பிரகடனம் செய்துள்ளனர். சுதந்திரப் பிரகடனம் செல்லுபடியாகாது என்று பப்புநியூகினி அரசாங்கம் உடனடியாகச் சுதந்திரப் பிரகடனத்தை ரத்துச் செய்துள்ளது.

சுதந்திரப் பிரகடனத்தைப் பகிரங்கமாக வெளியிடுவதற்குப் போதிய காரணகாரியம் இல்லை என்றும், சுதந்திரத்தைப் பிரகடனப் படுத்துவதன் மூலம் பிரச்னைகளுக்குத் தீர்வு காணமுடியாது என்று பதில் பிரதமர் ரெட் டிரோ தெரிவித்தார்.

பிரதமர் ராபி நாமலின் சிங்கப்பூரில் சர்வதேச நிதி உதவி மகாநாட்டில் பங்கு கொள்ளும் சமயம் இச் சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

## கலைவிழா ஒத்திவைப்பு

கடந்த 10 ஆம் திகதி வாழைச்சேனை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற இருந்த கலை கலாசார விழா ஒரு சில கழகங்கள் கலந்து கொள்ளாத காரணத்தினால் எதிர் வரும் 27 ஆம் திகதி சித்தாண்டி வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவுக்கு மாவட்ட உதவி இளைஞர் சேவை அலுவலர் திருமதி ராமச்சந்திரன் மாவட்ட இளைஞர் சேவை அலுவலர் எஸ். பேரின்பநாதன்ஆகியோர் இக் கலாசார விழாவில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (29)

## மகப்பேற்றின் பின் தாய் மரணம்

(வவுனியா)

சூடு வெந்த புலவு என்ற இடத்திலிருந்து வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட கர்ப்பிணித்தாய் மகப்பேற்றின் பின் மரணமானார்.

யூனில் சபியா என்ற முப்பத்தியாறு வயது மாது வவுனியா வைத்தியசாலைக்கு பிரசவத்திற்காக கொண்டுவரப்பட்டிருந்தார். மகப் பேற்றைத் தொடர்ந்து ஏற்பட்ட இரத்தப் பெருக்கு காரணமாக இவர் மரணமானதாக வவுனியா ஆஸ்பத்திரி வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர். எட்டு குழந்தைகளின் தாயான இவரின் குழந்தை சுகமாக இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். (தி)

# ஈழத்தமிழர்களின் உணவுவகைகள்

பழைய காலத்தில் வாழ்ந்த எம் மூதாதையரின் வாழ்க்கை முறையினை அவர் எமக்கு அளித்த அருஞ் செல்வங்களாகிய இலக்கியம், ஓவியம், சிற்பம், சாசனம் முதலியவற்றால் அறிகின்றோம். ஆனால் எமக்குச் சிறிது காலத்திற்கு முன்னே வாழ்ந்த மக்களின் பழக்க வழக்கங்களை இலக்கியம் முதலியவற்றாலன்றி எமது தாய் தந்தையர் முதலியோர் எமக்கு ஓய்வு நேரங்களில் பொழுது போக்கிற்காகக் கூறியவற்றில் இருந்து அறிகின்றோம். கடந்த ஐம்பதுஆண்டு காலம் உலகம் முழுவதற்கும் ஒரு புதிய நிலையை உண்டா

றும் உண்பர். இவற்றைவிட பனை ஒடியற்பிட்டு, பனை ஒடியற்கூழ், பனங்காய், பனாட்டு. குரக்கன் பிட்டு ஆகியவற்றைப் பெரும்பாலும் தமது உணவாகக் கொள்வர். அமாவாசை முதலிய விரத நாட்களிலேதான் அவர்கள் பொதுவாக அரிசிச்சோறு தின்பர். அதனால் அந்நாளையில் நாட்டு வயல்களிலே உண்டாக்கிய நெல்லு இங்கு வாழும் மக்களுக்கு போதியதாய் இருக்கும்.

### நாகரிகச் சூழலில் தமிழர் உணவு

சுழன்றது காலச் சக்கரம். சிறிது சிறிதாக நாகரிகச் சூழ

தமிழர்களுக்கு நெல் முக்கியமான உணவாக அமைந்ததும் மக்கள் யாவரும் அதை நாடோறும் உண்ணத் தொடங்கினர். அதுமட்டுமன்றிப் பணம் படைத்தவர்கள் சம்பா முதலிய உயர்ந்த சாதி நெல்லரிசிச் சோற்றை அருந்தும் வழக்கத்தை மேற்கொண்டனர். ஏழைகள் தரம் குறைந்த நெல்லை உண்டனர். இதற்கு முன் மக்களுக்குட் பெருவழக்காயிருந்த ஒடியற்பிட்டு, குரக்கன் பிட்டு முதலியன யாவும்

கும். அதன்பின் தண்ணீரையோ அன்றிப் பழஞ்சோற்றுத் தண்ணீரையோ வயிறாரக் குடிப்பர். அவ்வாறு இரவிலே வைத்த கறி இல்லா விட்டால்,சோற்றைப் பிழிந்து மோர் ஊற்றி ஊறுகாயும் சேர்த்து வெண்காயம் மிளகாயோடு அருந்துவர். மோர் கிடையாதுவிடின் வெறுமனே சோற்றுத் தண்ணீரோடு வெண்காயமும் மிளகாயும் சேர்த்து உண்ணுவர். அச்சோற்றுக்குட் சிறிது எலுமிச்சம் புளியையும் பிழிந்து விட்

புறக்கணிக்கப்பட்டன. உலகப் போர் முதலிய நெருக்கடிகள் வந்து நெல்லு நாட்டில்

டால் அவ் உணவின் சுவை பேசத் தேவையில்லை.

அந்த நாளையிலே மக்கள்

## உழவு இயந்திர சாரதிகளுக்கு நிந்தவூரில் சம்பள உயர்வு

(நிந்தவூர்)

நிந்தவூர் உழவு இயந்திர சாரதிகள் சங்கத்தினால், சாரதிகளுக்குச் சம்பள உயர்வு கோரி விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் சமரச முயற்சியின் காரணமாகப் பயன் கிடைத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் நிந்தவூர்ப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. விக்ரம் தலைமையில் உழவு இயந்திர உரிமையாளர்களையும் சாரதிகள் சங்கப் பிரதிநிதிகளின் சமரசக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் நிந்தவூர் சிற்றூர்க்

ரூபாவாக வழங்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

★ சாரதிகளுக்குத் தற்பொழுது வழங்கப்படும் தேநீர்ச்செலவுத் தொகை 20 ரூபாவை 25 ரூபாவாக வழங்குதல்.

★ சாரதிகள் தொழிலினின்றும் விலகிக்கொள்ள விரும்பினால் ஒருமாத முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும்.

★ முதலாளிமார் சாரதிகளை நீக்குவதானால் ஒரு மாத சம்பளத்தை வழங்கியே நீக்க வேண்டும்.

★ புதிதாக உழவு இயந்திரம் செலுத்துவதைப் பயில வருபவர்களை முதலாளியின் அனுமதியுடனேயே சேர்க்க வேண்டும்.

## நேரடியாக நிவாரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் போக்குவரத்து வசதியில்லாத பின்தங்கிய கிராமவாசிகளுக்கு புனர்வாழ்வு நிவாரண கொடுப்பனவுகள் அக்கிராமத்தில் நேரடியாக வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை மாவட்ட புனர்வாழ்வு திட்டமிடல் பணிப்பாளர் திரு செல்வின் ஐரனியஸ் தெரிவித்தார்.

வடமுனை, ஊற்றுச்சேனை ஆகிய குடியேற்றக் கிராமங்களுக்கு வங்கி அதிகாரிகள் சகிதம் சென்று கடந்த வாரம் மீளக்குடியமர்வு அலவன்ஸ் தலா 2000 ரூபாவும் 283 பேருக்கு 5 இலட்சம் 66ஆயிரம் ரூபாவும் தொழில் ஆரம்

# உணவுவகைகள்

**பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை**

> நிறைகுறைந்த பாண்; விலையோ அதிகம். பாண் சத்துள்ள உணவா? சத்துள்ள நமது பாரம்பரிய உணவுவகை நிறைய உண்டு. இக்கட்டுரை இதைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

பழைய காலத்தில் வாழ்ந்த எம் மூதாதையரின் வாழ்க்கை முறையினை அவர் எமக்கு அளித்த அருஞ் செல்வங்களாகிய இலக்கியம், ஓவியம், சிற்பம், சாசனம் முதலியவற்றால் அறிகின்றோம். ஆனால் எமக்குச் சிறிது காலத்திற்கு முன்னே வாழ்ந்த மக்களின் பழக்க வழக்கங்களை இலக்கியம் முதலியவற்றாலன்றி எமது தாய் தந்தையர் முதலியோர் எமக்கு ஓய்வு நேரங்களில் பொழுது போக்கிற்காகக் கூறியவற்றில் இருந்து அறிகின்றோம். கடந்த ஐம்பதுஆண்டு காலம் உலகம் முழுவதற்கும் ஒரு புதிய நிலையை உண்டாக்கி இருக்கின்றது. ஆறுதலாக, ஒரு குறித்த வேகத்திற் சுழன்று கொண்டு வந்த காலச் சக்கரம், இக் காலத்திற் கண்டுபிடித்த வானூர்தி போல், முன்னொருபோதுமில்லாத மிகுந்தவேகத்தோடு ஓடிக்கொண்டிருக்கிறது. அதனால், உலகத்தினர் வாழ்க்கை முறைகளுள்ளும் பலப்பல மாற்றங்கள் உண்டுபட்டுள்ளன. எமது இலங்கையில் வாழும் தமிழ்க் கூட்டத்தாருள்ளும் இக்காலவெல்லை எவ்வகையான மாற்றங்களை கொண்டு வந்திருக்கின்றது என்று சிறிது நோக்குவோம்.

> பழைய காலத்தில் பெரும்பாலும் தினைச் சோறு வரகுச் சோறு முதலியவற்றையே நாள் தோறும் உண்பர். இவற்றைவிட, பனை ஒடியற் பிட்டு, பனை ஒடியற் கூழ், பனங்காய்ப் பனாட்டு குரக்கன் பிட்டு ஆகியவற்றைப் பெரும்பாலும் தமது உணவாகக் கொள்வர். அமாவாசை முதலிய விரத நாட்களிலேதான் அவர்கள் பொதுவாக அரிசிச் சோறு தின்பர். அதனால் அந் நாளையில் நாட்டு வயல்களிலே உண்டாகிய நெல்லு இங்குவாழும் மக்களுக்குப் போதியதாய் இருந்தது.

## கடந்த 50 ஆண்டுகாலப்பகுதியில் ஈழத்தமிழர் உணவு

பழந் காலம் தொடக்கம் தமிழ் மக்கள் அரிசிச் சோற்றையே பெரும்பாலும் உண்டு வருவர். நெல்லையன்றி நாட்டில் அங்கங்கே வளரும் சாமை, தினை, குரக்கன், சோளம் முதலிய சிறு தானியங்களையும் அவர் உண்டு வந்தனர். கிழங்கு வகைகளையும் சேர்த்துக் கொள்ளுவர்.

சென்ற 50 ஆண்டுகளாக இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் உண்டு வந்த உணவு வகைகளைச் சிறிது ஆராய்வோம். அரிசிச் சோறு முதன்மையான உணவாய் இருந்த போதும் இக்காலத்தில் உண்பது போல அதனை ஒவ்வொரு நேரமும் உண்டு வரவில்லை. பெரும்பாலும் தினைச் சோறு, வரகுச்சோறு முதலியவற்றையே நாள்தோறும் உண்பர். இவற்றைவிட பனை ஒடியற்பிட்டு, பனை ஒடியற் கூழ், பனங்காய், பனாட்டு. குரக்கன் பிட்டு ஆகியவற்றைப் பெரும்பாலும் தமது உணவாகக் கொள்வர். அமாவாசை முதலிய விரத நாட்களிலேதான் அவர்கள் பொதுவாக அரிசிச்சோறு தின்பர். அதனால் அந்நாளையில் நாட்டு வயல்களிலே உண்டாக்கிய நெல்லு இங்கு வாழும் மக்களுக்கு போதியதாய் இருக்கும்.

## நாகரிகச் சூழலில் தமிழர் உணவு

சுழன்றது காலச் சக்கரம். சிறிது சிறிதாக நாகரிகச் சூழலில் மக்கள் அகப்பட்டனர். அதனால் தாம் இதுகாறும் உண்டுவந்த சிறுதானியவகைகளையும், கிழங்கு வகைகளையும் பனம் பண்டம் முதலியவற்றையும் வெறுத்து நெல்லுச் சோற்றுக்கு அடிமை ஆயினர். முன்னரிலும் நெல்லு அதிகம் தேவையாயிற்று. அதனால், பாய்க்கப்பல், தோணி முதலியவற்றால் தென் இந்தியாவில் இருந்து நெல்லைக் கொண்டு வந்தனர். சிறிது காலத்தில் நெல்லின் தேவை மேலுங்கூடியது. அப்பொழுது பர்மா தேசத்தில் நெல்லு ஏராளமாக இருப்பதை வியாபாரிகள் அறிந்து அங்கிருந்து அதனை இந்நாட்டிற்குக் கொண்டுவரத் தொடங்கினர்.

ஆண்டுதோறும் பாய்க் கப்பல் புரட்டாதி மாதம் பர்மாவிலுள்ள அரகன் என்னும் ஊருக்குப் பாய்எடுத்துச் செல்லும் ஒரு மாதம் வரை ஓடிய பின் அவ்வூரை அடையும். வங்காளக்குடாக்கடலில் அம் மாதங்களிலே அடிக்கும் பருவக்காற்றாகிய வாடைக்காற்று ஓரளவிற்கு ஓய்ந்த பின்னர் மார்கழி மாகம் மட்டில் நெல்லை ஏற்றிக்கொண்டு இலங்கைக்குப் புறப்பட்டுத் தை மாதமளவில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணப் பட்டினம் முதலிய இடங்களை அடைந்து அக்கப்பல்கள் தாம் ஏற்றிவந்த உணவைப் பறிக்கும் இவ்வாறு இலங்கைத்

சம்பா முதலிய உயர்ந்த சாதி நெல்லரிசிச் சோற்றை அருந்தும் வழக்கத்தை மேற்கொண்டனர். ஏழைகள் தரம் குறைந்த நெல்லை உண்டனர். இதற்கு முன் மக்களுக்குட் பெருவழக்காயிருந்த ஒடியற்பிட்டு, குரக்கன் பிட்டு முதலியன யாவும் புறக்கணிக்கப்பட்டன. உலகப் போர் முதலிய நெருக்கடிகள் வந்து நெல்லு நாட்டில் வராது குறைந்தாலொழிய இப்பொருட்களை எட்டியும் பாரார்.

முக்கியமான உணவு நெல்லுச் சோறாக அமைந்ததும், நெல்லில் இருந்தே சிற்றுண்டிப் பொருட்களையும் தேடினர். அரிசிப் பிட்டு, இடியப்பம் முதலியவை முற்றிலும் நெல்லரிசிமாவினால் அமைந்தவை. தோசை, இட்டலி முதலியவை நெல்லரிசியோடு உழுத்தம்மாவும் சேர்ந்தவை. இச்சிற்றுண்டிகள் யாவும் பொதுமக்கள் உணவாகவும் அமைந்தன. ஆனால் பணம் படைத்த உயர் மக்கள் இவற்றைவிட அரிசிமாவோடு உழுத்தம் மாவும் சர்க்கரையும் சேர்த்து ஆலங்காய்ப் பிட்டு, எண்ணெய்ப் பிட்டு, உழுத்தங்களி முதலியவற்றைத் தேடி தமது காலை உணவாக அமைத்துக் கொண்டனர். காலை உணவுப் பொருட்களை உண்ட பின்னர் பால் அல்லது மோர் குடிப்பர். தேநீர், கோப்பி முதலியவைபிற்காலத்திலேயே வந்து அரங்கில் ஏறியவை.

ஆனால் பொதுமக்கள் காலை உணவின் பின் தண்ணீரையே குடித்தனர். எனினும் பொது மக்களுக்குட் காலை உணவாகப் பெருவழக்கில் இருந்தது பழஞ்சோறு. இரவிலே தண்ணீர்விட்டு வைத்த சோற்றைப் பிழிந்து தண்ணீரை நீக்கி, இரவிலே எஞ்சிய கறிகள் யாவற்றையும் ஒன்று சேர்த்துக் கவளமாகத் திரட்டிக் கையிலே ஏந்தி வைத்துண்பர். பல கறிகளும் ஒன்று சேர்ந்தமையால் அச்சோறு மிகச் சுவையாக இருக்

மோர் ஊற்றி ஊறுகாயும் சேர்த்து வெண்காயம் மிளகாயோடு அருந்துவர். மோர் கிடையாதுவிடின் வெறுமனே சோற்றுத் தண்ணீரோடு வெண்காயமும் மிளகாயும் சேர்த்து உண்ணுவர். அச்சோற்றுக்குட் சிறிது எலுமிச்சம் புளியையும் பிழிந்து விட்டால் அவ் உணவின் சுவை பேசத் தேவையில்லை.

அந்த நாளையிலே மக்கள் பொதுவாக மரக்கறியையே உண்ணுவர். ஒரு சிறிது மீனும் சேர்த்துக் கொள்ளுவர். வசதி கிட்டின் இடையிடையே ஆட்டிறைச்சியும், கோழி இறைச்சியும் அருந்துவர். இவ் உணவுகளைப் பழங்காலந் தொட்டுத் தமிழ் மக்கள் உண்டு வந்தனர். ஆறுமுக நாவலரவர்கள் காலத்திலே சைவசமயமும் ஆகமங்களிற் கூறியுள்ள அதன் ஆசாரங்களும் சைவ வினா விடை முதலிய சிறு சிறு நூல்கள் மூலம் மக்களுக்குப் போதிக்கப்பட்ட பொழுது ஒரு தொகையான மக்கள் புலால் உணவை விட்டொழித்தனர். கடுஞ் சைவ ஒழுக்கத்திலே நிற்க விரும்பினோர் கண் காணாமற் சாப்பிடும் முறையையும் கைக்கொண்டனர். ஆனால் பெரும்பாலான மக்கள் வெள்ளி, செவ்வாய் விரத தினங்கள் முதலிய நாட்களிலே புலாலுணவை ஒறுத்துச் சமய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்தனர். காலம் மாறியது. ஆங்கிலக் கல்வி மூலம் ஆங்கில நாட்டு வழக்கங்கள் புகுந்தன. அதனால் மக்களின் ஆசாரங்களும் ஒரு வகையில் மாற்றமடைந்தன. அதனோடு ஊண் வகைகளும் மாறின. ஆங்கிலம் கற்று அரச உத்தியோகம் பார்க்கும் மக்கள் நாட்டிலே பலப்பல பாகங்களுக்கும் போகவேண்டி நேர்ந்தது. அதனால் அவர் சமய ஆசாரப்படி முற்றாக நடந்து கொள்ள முடியவில்லை. அதனாலே தம் பழக்க வழக்கங்களை ஒரு வகையாய் மாற்றினர். அதனோடு ஊண் வகையையும் மாற்றமடைந்தது.

### கோப்பி, தேநீர்க் காலம்

சிறு பான வகைகளில் கோப்பியும், தேநீரும் பண்டைய பழந்தண்ணீர் முதலியவற்றின் இடத்தைப் பிடித்துக் கொண்டன. இக்காலத்தில் நித்திரை விட்டெழுந்ததும் வறிய இல்லங்களிலே கூடக் கோப்பி அல்லது தேநீரையே அருந்துவர். அதன் பின்னரே பல் துலக்கல் முதலியயாவதும். இக்காலத்தை ஒரு வகையில் தேநீர் கோப்பிக் காலம் என அழைக்கலாம்.

---

நிந்தவூர் உழவு இயந்திர சாரதிகள் சங்கத்தினால், சாரதிகளுக்குச் சம்பள உயர்வு கோரி விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் சமரச முயற்சியின் காரணமாகப் பயன் கிடைத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் நிந்தவூர்ப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. விக்ரம் தலைமையில் உழவு இயந்திர உரிமையாளர்களையும் சாரதிகள் சங்கப் பிரதிநிதிகளின் சமரசக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் நிந்தவூர் சிற்றூர்க் கிளைத்தலைவர் ஜனாப். எஸ். எச். அகமட், உப தலைவர் டாக்டர் திரு. வீ. தவயோகநாதன், பொருளாளர் ஜனாப். வை. எல். ஏ. அஸிஸ் ஆகியோரும் பிரசன்னமாக இருந்தனர்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட சமரச முயற்சியின்படி தற்பொழுது உழவு இயந்திர சாரதிகளுக்கு வழங்கப்படும் மாதாந்தச் சம்பளம் 1300 ரூபாவை அதிகரித்து 1500 ... டது.

★ சாரதிகளுக்குத் தற்பொழுது வழங்கப்படும் தேநீர்ச்செலவுத் தொகை 20 ரூபாவை 25 ரூபாவாக வழங்குதல்.

★ சாரதிகள் தொழிலினின்றும் விலகிக்கொள்ள விரும்பினால் ஒருமாத முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும்.

★ முதலாளிமார் சாரதிகளை நீக்குவதானால் ஒரு மாத சம்பளத்தை வழங்கியே நீக்க வேண்டும்.

★ புதிதாக உழவு இயந்திரம் செலுத்துவதைப் பயில வருபவர்களை முதலாளியின் அனுமதியுடனேயே சேர்க்க வேண்டும்.

★ குறிப்பிட்ட சில போகங்களுக்கு (மூன்று போகங்களுக்கு) சம்பள உயர்வு கோரக்கூடாது என்ற தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (53)

---

லாத பின்தங்கிய கிராமவாசிகளுக்கு புனர்வாழ்வு நிவாரண கொடுப்பனவுகள் அக்கிராமத்தில் நேரடியாக வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை மாவட்ட புனர்வாழ்வு திட்டமிடல் பணிப்பாளர் திரு செல்வின் ஐரனியஸ் தெரிவித்தார்.

வடமுனை, ஊற்றுச்சேனை ஆகிய குடியேற்றக் கிராமங்களுக்கு வங்கி அதிகாரிகள் சகிதம் சென்று கடந்த வாரம் மீளக்குடியமர்வு அலவன்ஸ் தலா 2000 ரூபாவும் 283 பேருக்கு 5 இலட்சம் 66ஆயிரம் ரூபாவும் தொழில் ஆரம்பித்தல் நிவாரணமாக தலா 4 000 ரூபாவும் 176 பேருக்குமாக 7 லட்சத்து 4 000 ரூபா வழங்கப்பட்டது.

கிராமவாசிகள் முன்னிலையில் இக் கொடுப்பனவு வழங்கப்படுவதால் மோசடிகள் இடம் பெறமுடியாது என்றும் அவர் தெரிவித்தார். (37)

---

## வட்ட அவை

(வந்தாறுமூலை)

வாழைச்சேனை வட்ட அவைக்கான பிரதிநிதிகள் தெரிவுக் கூட்டம் அன்மையில் வாழைச்சேனை தமிழ் மகாவித்தியாலயத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கோறைப்பற்று வட்ட இணைப்பாளர் திரு. எஸ். பீ. தலைமையில் நடை பெற்றது.

இவ் வட்ட அவைக்குப்பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் :-கு. தம்பையா செயலாளர்:- ஏ. யூ. எம்-அலிபர் பொருளாளர் :-கு தியாகராஜா. உபதலைவர்;-எம். எஸ். உதுமாலெவ்வை உபசெயலாளர்:- கே. தயானிதி மற்றும்:-அ. பாலகிருஸ்ணன், பூ. கணேசமூர்த்தி. க கிருஸ்ணப்பிள்ளை. எம் .சீ. எம்- இஸ்மாயில் .எம்.எச். எம்.காதர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (29)

---

ஆரோக்கியநகர்

## தமிழ் வித்தியாலயத்தை அரசு பொறுப்பேற்றது

(விசேட நிருபர்)

இப்பாடசாலை 1984 ஆம் ஆண்டு ஓலை கொட்டில் நிறுவப்பட்டது. 1977ஆம் 1983 ஆம் ஆண்டுகளில் அகதிகளாக வந்து இங்கே குடியேறியவர்களின் சிரமதான உழைப்பிலே குறைந்த செலவில் இப் பாடசாலைக் கட்டடத்தை அமைக்கக் கூடியதாக இருந்தது.

கிளிநொச்சி ஆரோக்கிய நகர் தமிழ் வித்தியாலயத்தை அரசு பொறுப்பேற்ற வைபவத்தில் பேசிய யாழ். மனித முன்னேற்ற நடு நிலைய இணைப்பதிகாரி திரு.ஜஸ்ரின் பெர்னான்டோ மேற்கண்டவாறு கூறினார்.

பங்குத் தந்தை அருட்திரு பி. இருதயதாஸ் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

திரு. ஜஸ்ரின் பெர்னாண்டோ தொடர்ந்து பேசுகையில்:

''அகதிகளாக வந்து சேர்ந்த உங்களின் பங்களிப்பும் முன்னர் சொற்ப ஊதியத்தில் பணி புரிந்த ஏழு தொண்டர் ஆசிரியைகளின் சேவைகளுமே இப்பாடசாலையை உருவாக்கின என்றார்''

மாங்குளம் கொத்தணி அதிபா திரு. த. சண்முகரத்தினம் பேசுகையில் ''உதவி அரச அதிபரின் நேரடி முயற்சியாலேயே இவ்வளவு விரைவாக இப்பாடசாலையைப் பொறுப்பேற்க முடிந்தது. அத்துடன் கோட்டக் கல்வி அலுவலகத்தையும் அதிகாரிகளையும் முல்லைத்தீவுக்கு மாற்றாமல் துணுக்காய் அல்லது மாங்குளத்தில் இயங்க வழிசெய்யும் படியும் கேட்டுக் கொள்கிறேன்'' என்றார்.

பொது மக்கள் சார்பாக திரு. அருளானந்தம், திரு. சக்திவேல் ஆகியோரின் நன்றி உரைகளை தொடர்ந்து மர நடுகை நிகழ்ச்சி இடம் பெற்றது. வேறு பலரும் உரையாற்றினர். (21)

## 10ஆம் வகுப்பு படித்தவருக்கே பயிற்சி

(விசேட நிருபர்)

''10 ஆம் வகுப்புவரை கல்வி பெற்ற இளைஞர்களுக்கே சிகை அலங்கரிப்புத் தொழிலைக் கற்றுக் கொடுக்க அனுமதிக்க வேண்டும்''

''குடிமைத் தொழிலில் ஈடுபடும்சிகைஅலங்கரிப்பாளர்கள் இரண்டு மாத காலத்திற்கு முன்னதாக அத்தொழிலைக் கைவிட வேண்டும்''

மேற்கண்ட இரு தீர்மானங்களும் நேற்றுக் காலை யாழ் மனோகராத் திரைப் படமாளிகையில் நடைபெற்ற வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கபொதுக் கூட்டத்தில் பலத்த கரகோசங்கள் மத்தியில் நிறைவேற்றப் பட்டன. (21)

## ஒட்டிசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை நட்டத்தில் ஓடவில்லை

(முல்லைத்தீவு)

கைத்தொழில் அமைச்சரால் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் அரசாங்கக் கூட்டுத்தாபனத்துக்குச சொந்தமான பதினொரு செங்கல். ஓட்டுத் தொழிற்சாலைகளில் ஒன்பது தனியாருக்கு விற்கப்பட்டு விட்டன. அம்பாறை மாவட்டத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டிசுட்டானிலும் உள்ள இரு தொழிற்சாலைகள் மட்டும் யாருக்கும் விற்கப்பட்டுக் கைமாறாமல் இன்றுவரை இருந்து வருகின்றன, இத் தொழிற்சாலைகளை வாங்குவதற்கு யாரும் முன்வரவில்லை. தொழிலாளர்களும் பங்குதாரர்களாகச் சேரவிரும்பவில்லை. இந்த இரண்டு தொழிற்சாலைகளுக்குமாகத் தலைமையகம் கொழும்பில் இயங்க வேண்டியுள்ளது,

ஒட்டிசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை கடந்த ஏப்பிரல் மாதம் மட்டும் ரூபா 7 1/2 லட்சம் இலாபமாகக் சம்பாதித்துள்ளது. ஒட்டிசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை என்றும் நட்டமடையவில்லை ஆனால், 11 தொழிற்சாலைகளின் கணக்குகளையும் ஒட்டு மொத்தமாகப் பார்த்து மொத்த நட்டத்தில் ஒட்டிசுட்டான் தொழிற்சாலையைகள் சேர்த்துக் கொள்கிறார்யும். அதனால்தான் ஒட்டிசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையையும் விற்கத் திட்டமாம். (58)

## வாசிகசாலையில் ஈழநாதம்இல்லை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பிரதேச அபிவிருத்தி சபை அலுவலகநூலகத்தில் ஈழநாதம் பத்திரிகை வாசகர்களின்பார்வைக்கு வைக்கப்படுவதில்லை இதையிட்டு பல வாசகர்கள்அதிருப்தி தெரிவித்துள்னர்.

அத்துடன் கடந்த காலங்களில் இந் நூலகத்தில் வைக்கப்பட்ட செய்தித் தாள்களின் தொகையிலும் பார்க்கத் தற்போது வைக்கப்படும் செய்தித்தாள்களின் தொகை மிக குறை வாகவே உள்ளது என இந் நூலக அலுவலர் ஒருவர் தெரிவித்தார். (22)

## தற்கொலை

(யாழ்ப்பாணம்)

கட்டுடையைச் சேர்ந்த 30 வயது மதிக்கத்தக்க பெண்மணி குடும்பத்தகராறுகாரணமாக அலரிக்காய் அருந்தி தற்கொலை செய்துகொண்டார். இவர் 2 குழந்தைகளின் தாய் என்பது குறிப்பிடத்தக்கது.

புங்குடுதீவு, நயினாதீவு

## ப. நோ. கூ. சங்கத்துக்கு போதிய நிதி வசதி இல்லை

(புங்குடுதீவு)

நிதித்தேவை அதிகரிப்பினாலும், தனியாருடன் போட்டி போடுவதனாலும். தனியாரிடம் கொள்வனவு செய்வதனாலும் பாவனையாளர்களுக்கு குறைந்த விலையில் பொருட்களை விற்கமுடியாத நிலை ஏற்படுகின்றது,

அத்துடன் மக்கள் வங்கியிடமிருந்தும் எமக்கு சரியான உதவி கிடைப்பதில்லை. இதனால் எமது சங்கம் பாரிய நிதி நெருக்கடிகளை எதிர் நோக்கிக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. அண்மையில் மக்கள் வங்கி முகாமையாளரை அழைத்து எமது நிலைபற்றி தெரியப்படுத்தி இருக்கின்றோம். எமது குறைகளை நிவர்த்தி செய்து எமது சங்கம்சிறப்பாக இயங்க அனைவரதும் ஒத்துழைப்பு அவசியம்.

இவ்வாறு இம்மாதம் பதின்மூன்றாம் திகதி புங்குடுதீவு மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க விசேட பொதுக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய மேற்படி சங்கத் தலைவர் திரு. ப. கனகலிங்கம் அவர்கள் தெரிவித்தார்.

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் (கணக்காய்வு) திரு லிங்கநாதன், யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. சந்திரசேகரம் புங்குடுதீவுப் பகுதி கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. நேசராசா ஆகியோரும் பேசினார்கள்.

இச்சங்கத்தின் செயற்பாடுகள் வியாபாரம், முயற்சி ஆகியவற்றில் தற்போதுகாணப்படும் முன்னேற்றத்தையும் அதற்கு காரணமான தலைவர் நெறியாளர்கள், ஊழியர்கள் அனைவரையும் அவர்கள் பாராட்டினார்கள்.

ஊழியர்களை ஊக்குவிக்க வேண்டுமெனவும். இயக்குனர் சபையின் செயற்பாடுகளை பிறர் விமர்சிக்க இடமளிக்க கூடாது எனவும் நீண்டகால வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சங்கத்தின் நிதி நெருக்கடியை தீர்க்க முடியும் எனவும் அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்

தற்போது சிறப்பாக இயங்கிவரும் இச்சங்கம் எதிர் காலத்திலும் சிறப்படைய அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். புங்குடுதீவு மக்களின் குடிதண்ணீர்த் தேவையைத் தீர்க்கும்முகமாக சாட்டியில் காணி ஒன்று கொள்வனவு செய்யவிருக்கும் திட்டத்தையும் மிகவும் வரவேற்றார்கள்.

சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினர்கள் பெருந்தொகையாக கலந்து கொண்டனர்.

இறுதியாக பொதுச்சபையின செயலாளர் செல்வி செ. செல்வவதனா நன்றியுரை கூறினார். (22)

## ஜாக்குலினுக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

பிரான்ஸ் வைத்தியக் குழுவின் தொடர்பு அதிகாரியான செல்வி சாட்டனேற் ஜாக்குலின் நாடு திரும்புவதை முன்னிட்டு பிரான்ஸ் கலாசாரப் பிரிவின் யாழ்ப்பாணக் கிளையில்பிரிவுபசார நிகழ்ச்சிநடத்தப்பட்டது.

பிரான்ஸ் வைத்தியக்குழு மந்திகையில் இருந்து அண்மைக் கால நடவடிக்கைகளின் போது காயமுற்றவர்களுக்கு உடனுக்குடன் சிகிச்சை யளித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

## பரிசளிப்பு விழா ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 21 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவிருந்த யாழ்ப்பாணக் கல்லூரிப் பரிசளிப்பு விழா இம்மாதம் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4-30 மணிக்கு, கல்லூரிப் பூங்காவில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது

## ஓராண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்

9-12-1936

மறைவு

18-5-1989

க. துரைராஜா

பெரிய தம்பிரான் கோவிலடி,
வண்ணார்பண்ணை மேற்கு,
யாழ்ப்பாணம்.

மனைவி-மணிமேகலை
மக்கள், சகோதர
சகோதரி, மாமன்மார்
மாமிமார்

(R/494)

## நினைவு அஞ்சலி





| தனபாலசூரியர் றஜந்தன் | | தனபாலசூரியர் குழலி | |
|---|---|---|---|
| (யா / கனகரத்தினம் ம. வி. மாணவன்) | | யா / கன்னியர்மடம் ம. வி. மாணவி) | |
| படைப்பு: | அழிப்பு | படைப்பு: | அழிப்பு: |
| 22-02-1969 | 20-05-1985 | 08-04-1972 | 09-11-1988 |

எம் இதய அசஞ்லிகளை காணிக்கையாக்குகின்றோம்.

இல. 5, வேலப்பர் ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் கலங்கும்
பெற்றோர், சகோதர, சகோதரிகள்,
உறவினர்கள், மாணவ மாணவிகள்,
ஆசிரியர்கள், நண்பர்கள்

B.491

## ஓராண்டு நினைவு அஞ்சலி



## பருத்தித்துறை நகரில் சாய்ப்புச் சட்டம் அமுல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில்சாய்ப்புச் சட்டத்தை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் விடுதலைப் புலிகள் இயக்க மக்கள் முன்னணி வடமராட்சி இணைப்பாளர் திரு. குணம் தலைமையில் வர்த்தக சங்கப் புனரமைப்புக் கூட்டம் நடைபெற்று புதிய வர்த்தக சங்கம் இயங்கத் தொடங்கியுள்ளது

வர்த்தக சங்கம் இயங்கத் தொடங்கியதையடுத்து நடைபெற்ற கூட்டத்திலேயே வர்த்தக நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டு பருத்தித்துறையில் ஞாயிற்றுக்கிழமைகளில் கடைகள் மூடப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

எனினும் பத்திரிகை விற்பனை நிலையங்கள் தேநீர்க் கடைகள்,சலூன்கள் மருந்துக் கடைகள், வீடியோக் கடைகள் என்பனவற்றிற்கு இதிலிருந்து விலக்களிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேநீர்க்கடைகளில் தேநீர் உணவுப்பொருட்கள் தவிர்ந்த ஏனைய பொருட்களை விற்பனை செய்வதற்கும் பருத்தித்துறைச் சந்தையினுள் உள்ள சிறுகடைகளில் பல சரக்குப் பொருட்களை விற்பனை செய்வதற்கும் சாய்ப்புச் சட்டநாட்களில் அனுமதியளிக்கப்பட மாட்டாது.

இந்நடைமுறைகளை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப் படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (25)


## வெற்றிடங்கள்

### மொழிபெயர்ப்பாளர், தட்டெழுத்தாளர்

ஆங்கிலத்தில் உள்ள அரிய நூல்களைத் தமிழாக்கம் செய்ய...

(R/494)

# ஓராண்டு நினைவு அஞ்சலி



## விஜயநாயகம் விஜயகுமார்
(தொண்டமானாறு பிரசைகள் குழு)

மலர்வு 02 - 11 - 1946 — துரோகிகளின் அழிப்பு 01 - 06 - 1989

திதி 21 - 05 - 1990

தூய தமிழீழ வீர மறவா உன்னை
துரோகிகளின் துப்பாக்கி வானுலகிற்கு அனுப்பியதா?
நாமாக நமில்லை வாழ்வாக வாழ்வில்லை
நீங்காத உன் நினைவில் நிலவுலகில் எம்மை விட்டு
நீ மட்டும் வானுலகில் வாழ்ந்தனையோ ஓராண்டு
பரிவோடு உன்னை பத்துமாதம் சுமந்த
பாவி அன்னை கதறுவது பார் முழுதும் கேட்கிறது
தீராத நினைவுகளை நெஞ்சமதில் சுமந்து கொண்டு
மீளாது துயில் கொள்ளும் நீ மட்டும் கேட்கவில்லை
மூத்தவனாய் தலைமகனாய் முதற்பிள்ளை என்றுன்னை
பூரித்துத் தான் வளர்த்த உன் பிதாதனை மறந்தாய்
காவலுக்கு நீ இருக்க கலங்குவேனோ நான் என்று
கனவு கண்ட காதலாள் தனைப் பிரிந்தாய்
பயம் என்ன நமக்கு அப்ப வே உலசென்று
ஆர்ப்பரித்துத் தானிருந்த குஞ்சுகளை விடடகன்றாய்
அகலாது அஞ்சாது ஐவராகித் தான் நின்று
பெரியண்ணா என்று பேசும் குரல் கேட்காமல்
போய் விட்டாய்

ஆறாத மனக்கவலை ஆறாது எம்மை விட்டு
ஓயாத நினைவலை ஓயாது பாரை விட்டு
வாழ்க உன் புகழ்

அன்னாரின் ஓராம் ஆண்டு வீட்டுக் கிருத்தியம் தொண்டமானாறு சின்னமலையில் உள்ள அவரது வீட்டில் 21 - 05 - 1990 இல் நடைபெறும். இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

உன்னை இழந்து தவிக்கும்:

பெற்றோர், மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனிமார்,
நண்பர்கள், உறவினர்கள்.

(R/484)

---



## தனபாலசூரியர் றஜந்தன்
(யா / கனகரத்தினம் ம. வி. மாணவன்)

படைப்பு: 22-02-1969 அழிப்பு 20-05-1985

## தனபாலசூரியர் குழலி
யா / கன்னியர்மடம் ம. வி. மாணவி)

படைப்பு: 08-04-1972 அழிப்பு: 09-11-1988

எம் இதய அசஞ்லிகளை காணிக்கையாக்குகின்றோம்.

உங்கள் பிரிவால் கலங்கும்

இல. 5, வேலப்பர் ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

பெற்றோர், சகோதர, சகோதரிகள்,
உறவினர்கள், மாணவ மாணவிகள்,
ஆசிரியர்கள், நண்பர்கள்

B.491

---

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
### உழவு இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறுவிலைகள்

மாநகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கூட்டிச் சேர்த்து வைக்கப் படும் குப்பை கூழங்களை ஏற்றி சபையின் எல்லைப்பகுதியில் கொண்டுபோய் பறிப் பதற்கு ஒப்பந்த அடிப்படையில் பெட்டியுடனான உழவு இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. நாளாந்தம் சுமார் 50 மைல் களுக்குட்பட்ட தூரம் குப்பைகளை ஏற்றிப் பறிப்பதற்கு நிர்ணயிக்கப்படும்.

உழவு இயந்திரங்களுக்கான எரிபொருள், சாரதி மற்றும் இயந்திரங்களில் ஏற் படக்கூடிய பழுதுகள் யாவற்றிற்கும் கூறுவிலைக்காரர்களே பொறுப்பேற்க வேண்டும்.

கூறுவிலைக்குரிய விண்ணப்பங்களை மாநகரசபை அலுவலகத்திலுள்ள சுகாதாரப் பகுதியில் எதிர்வரும் 25–05–90 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

வி. பி. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(B990)

---


## எங்களிடம்,.....

❋ உங்கள் மங்கல வைபவங்களுக்கான அன்பளிப்பு பொருட்கள்...

❋ உங்கள் வீட்டுப் பாவனைக்குகந்த பிளாஸ்டிக் பொருட்கள்

❋ நங்கையர் விரும்பும் அழகு சாதனப் பொருட்கள்

❋ சாப்புச் சாமான்கள் அனைத்தும்......

ஒரே இடத்தில்

# மனோ அம்பிஸ் ஸ்ரோர்ஸ்
# பென்சி குட்ஸ்

(அந்தோனியார் கோயில்முன்பாக)

யாழ் வீதி — மானிப்பாய்.

(B 953)


---

புனரமைப்புக் கூட்டம் நடை பெற்று புதிய வர்த்தக சங் கம் இயங்கத் தொடங்கியுள் ளது.

வர்த்தக சங்கம் இயங்கத் தொடங்கியதையடுத்து நடை பெற்ற கூட்டத்திலேயே வர்த் தக நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டு பருத்தித்து றையில் ஞாயிற்றுக்கிழமை களில் கடைகள் மூடப்பட வேண்டும் என்று தீர்மானிக் பனை செய்வதற்கும் பருத் தித்துறைச் சந்தையினுள் உள்ள சிறுகடைகளில் பல சரக்குப் பொருட்களை விற் பனை செய்வதற்கும் சாய்ப் புச் சட்டநாட்களில் அனும தியளிக்கப்பட மாட்டாது.

இந்நடை முறைகளை மீறும் வர்த்தகர்களுக்கு எதி ராகக் கடும் நடவடிக்கை எடுக்கப் படுமென்றும் அறி விக்கப்பட்டுள்ளது. (25)

---

## வெற்றிடங்கள்
### மொழிபெயர்ப்பாளர், தட்டெழுத்தாளர்

ஆங்கிலத்தில் உள்ள அரிய நூல்களைத் தமிழாக் கம் செய்ய மேலும் சில மொழிபெயர்ப்பாளரும் தமிழ்த் தட்டெழுத்தாளர்களும் தேவை, வயதெல்லை இல்லை. 27-5-90 ஞாயிற்றுக் கிழமை காலை 9மணிக் கும் 1 மணிக்கும் இடையில் தகுதிச் சான்றுகளுடன் நேரில் சமுகம் தரவும் திறமை, அனுபவத்துக்கேற்ப சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

தொடர்பு:

இல 6, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(மணிக்கூட்டுக் கோபுரத்துக்கண்மையில்)

(R/493)

---

## 1 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



## ❋ செல்வன் நிரோஸ் ❋

பத்மநாதன் மனோறஞ்சினி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் நிரோஜன் தனது 1 ஆவது பிறந்தநாளை இன்று 20-05-90 மேற்கு ஜேர்மன் (கொலண்ட்) அவரது இல்லத்தில் வெகு விமர்சையாக கொண்டாடு கிறார். இவரை சுவிசில் வசிக்கும் செல்வன் மாமா பாண்டியன்குளத்தில் வசிக்கும் அம்மம்மா, தாத்தா, கலா அன்ரா, பவானி அன்ரா, வேணி, ராஜி அன்ரா, மாமாமார் அதே இடத்தில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், அத்தைமார் நெடுந்தீவில் வசிக்கும் பூட்டி, அம்மம்மாமார், மாமாமார், தாத்தா மார் மற்றும் உறவினர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் எய்தி வாழ்க என வாழ்த்து கின்றனர்.

பாண்டியன்குளம்.

(R/474)

### சிந்தனைக்கு

அனுபவம் முன்னேற
அசாத்தியம் என்பது
பின்வாங்குகிறது.
- சேர் ஆர்தர் ஹென்ஸ்மன்.

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 20-05-90
தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண். 05

## தட்டிக் கேட்க ஆளுண்டு

இலங்கையின் வடக்கு கிழக்கில் செய்ய முடியாத வாலாட்டத்தை சிறிலங்கா அரசு இப்பொழுது மலையகத்தில் தொடங்கியிருக்கிறது.

மலையகத்தில் தீவிரவாதிகள் என்ற பெயரில் தோட்டத் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுகிறார்கள் காரணமெதுவுமின்றிக் காவலில் வைக்கப்படுகிறார்கள், சித்திரவதை செய்யப்படுகிறார்கள், கொலை செய்யப் படுகிறார்கள்.

''தட்டிக்கேட்க ஆளில்லை என்றால் தம்பி சண்டப் பிரசண்டனாவான்'' என்பது போல மலையகத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் இன்னல்கள் பற்றி யாருமே குரல் கொடுக்க முன்வராததனால் சிறிலங்கா அரசின் காவல் படையினர் இஷ்டம்போல் நடந்து கொள்கிறார்கள்.

மலையகத் தமிழ் மக்களின் முடிசூடா மன்னன் என்றும் அவர்களின் ஏகத் தலைவனென்றும் வர்ணிக்கப்படுபவர் திரு. சௌமியமூர்த்தி தொண்டமான்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் பெருந் தொகையாக அங்கம் வகிக்கும் ஒரே தொழிற்சங்கம் தொண்டமான் தலைமையிலுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்று பெருமையுடன் கூறிக் கொள்ளப்படுகிறது.

ஆண்டுக்கொரு தடவை ஈராண்டுக்கொரு தடவை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கோலாகலமாக மாநாடு கூடி திரு. தொண்டமானையே தலைவராகத் தெரிவு செய்யும். ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் இடம் பெறும்; சிறிலங்கா ஜனாதிபதியின் சிறப்பு உரையும் முக்கிய நிகழ்ச்சியாக இருக்கும்.

மலையகமக்களின் பிரச்சினைகள் பற்றி தொண்டமான் காங்கிரஸ் தவிர வேறு யாரும் குரல் கொடுத்தாலும் அவர்கள் பிரச்சினை சம்பந்தமாக வேறு எவரும் நடவடிக்கை எடுக்க முற்பட்டாலும் தொண்டமான் காங்கிரசுக்குப் பிடிக்காது.

அவர்களைத் தவிர வேறுயாரும் இப்பிர[illegible]னையில் ஈடுபட்டால் அவர்கள் குழப்பக்காரர்கள், தீவிரவாதிகள் என்று நாமம் சூட்டப்படும்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தோட்டத் தொழிலாளர்களாக வாய்மூடி மௌனிகளாகச் சிறு சம்பள உயர்வுடன் திருப்திப்படுபவர்களாக இருக்க வேண்டுமென்பதே பரம்பரை பரம்பரையாகத் தோட்டத் தொழிலாளர்களுக்குத் தலைமை தாங்கும் தொழிற் சங்கங்களின் நோக்கமாகும்.

இந்த நிலை இப்போது மாறி [illegible]

# எங்கள் நெஞ்சில் தீபமாகிவிட்ட தியாகி லெப்டினன் கேணல் ராதா

1985 ஆம் ஆண்டு பங்குனி சித்திரை காலகட்டம் மன்னார் மண்ணில் வீரவேங்கை ராதாவின் (ஹரிச்சந்திரா) காலடிபடுகிறது. அப்போது மன்னாரில் எமக்கு ஒரே ஒரு முகாம் மட்டுமே இருந்தது. ஸ்ரீலங்கா இராணுவத்தின் கெடுபிடிகள் கடடவிழ்ந்து விடப்பட்ட நேரம் வீரத்துக்கும், விவேகத்திற்கும் விக்டர் அண்ணன் எமக்கு அர்த்தம் சொல்லித் தந்த காலம்.

'ராதா வந்திற்று', 'ராதா இனி கவனிக்கும்' – விக்டர் அண்ணா சுமை குறைந்தவராகப் பேசினார். ராதா அண்ணன் இடது கைகாரர். ராதா அண்ணன் தலை சீவமாட்டார். ஆம் இடது கை தான் ராதா அண்ணனுக்கு சீப்பு, கூடவே மழலைச் சிரிப்பும் 5 ஆவது பயிற்சி முகாம் நடாத்தியவர். நல்ல கெட்டிக்காரர். ஆரம்பத்தில் ராதா அண்ணனைப் பற்றி அறிந்து கொண்டது இவைதான். போராட்ட பயணம் தொடர்கிறது. மன்னார் பொலிஸ் நிலையம் தாக்குவதற்கு திட்டமிடப்படுகிறது. ஐசே! ஐசே! என்றவாறு ஒவ்வொரு தோழனையும் தோள்தட்டி வளர்ப்பவர் ராதா அண்ணன்.

நுட்பமான பேச்சு, நுட்பமான வேலை, வெற்றிகரமான மன்னார் பொலிஸ் நிலைய தாக்குதல். அன்று இரவு லண்டன் பி. பி. சி செய்தியில் கரந்தடிப் படையினர் துல்லியமாக திட்டமிட்டு, நுட்பமாகத் தாக்கியுள்ளனர் என்று அந்த தாக்குதலை வர்ணித்தது. விக்டர் அண்ணன் தலைமையேற்ற தாக்குதலில் ராதா அண்ணனின் முதல் பங்களிப்பு சிறப்பாக அமைந்திருந்தது. மன்னார் புலிகளின் போராட்ட சாதனைக்கு வித்திட்டதாகவும் அது அமைந்திருந்தது.

எமது ஒப்பற்ற தலைவரின் நன்மதிப்பைப் பெற்ற ராதா அண்ணன் குழந்தை உள்ளம் படைத்தவர். ஆழமான அரசியல் அறிவுடன் இராணுவ தொழில் நுட்பங்களிலும் கை தேர்ந்தவர். ஆங்கில மொழியில் அழகாகப் பேசுவார், சிங்கள மொழியும் சரளமாக பேசக்கூடியவர். தனதுஅபார திறமையினால் மூத்த உறுப்பினர்களுக்கு இணையாக நின்றவர். தலைவர் மீது மிகுந்த பற்றும், பாசமும் கொண்டவர். இயக்கத்தில், தோழர்களிடத்தில்உயிரையே வைத்திருந்தவர். தமிழ் மக்கள் படுகின்ற வேதனைகளை ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் காட்டுமிராண்டி தனங்களை கண்டு கண் சிவந்து நிற்பார். உயிருடன் இருக்கும் வரை [illegible] சொல்லில் இருந்த வீரம் ராதா அண்ணன் வாழ்கையிலும் இருந்தது.

எமது ஒரு தோழன் இராணுவத்தால் சுடப்பட்டு விட்டான் என்றால் ராதா அண்ணன் பொறுக்கமாட்டார். மறு நாள் பாரிய குண்டு வெடிப்பு ஜீப் ஒன்று தூள், அல்லது இராணுவடிரக் ஒன்று சிதைக்கப்பட்டது என்ற சேதி எம் காதுகளில் தேனாகப் பாயும். நிமிர்ந்து பார்த்தால் அங்கு ராதா அண்ணன் வெற்றிக்களிப்பில் நிற்பார்.

எமக்கு வீரமூட்டி, தன்னம்பிக்கையூட்டி, அறிவூட்டிவளர்த்த ராதா அண்ணன் தலைவன் அழைப்பை ஏற்று மன்னாரிலிருந்து செல்கின்றாராம் என்ற சேதி எமக்கிடையில் பரபரப்பாக பேசப்படுகிறது. 'என்ன ராதா அண்ணன் மன்னாரை விட்டு போறிங்களாம்' என்று கேட்ட தோழர்களிடம் இல்லை ஐசே அண்ணன் (தலைவர்) கூப்பிடுகிறார் நான் சீக்கிரம் திரும்பிவருவேன் என்று கூறினார் துக்கம் கனத்த குரல், கண்கள் குளமாகின்றது. ராதா அண்ணனுக்கு ஒரு பழக்கம் யாரையாவது தண்டித்தால் அல்லது யாராவது வீரமரணமடைய நேரிட்டால் தேம்பி தேம்பி அழுவார். சுற்றிவர நின்று பார்க்கிற எம்மை சமாளிப்பதற்காக தம்மை சுதாகரித்துக்கொள்ளபின்னர் நாம் கிண்டல் செய்ய தந்தையாக தாயாக அண்ணனாக தம்பியாக எதுவாக ஒப்பிட்டாலும் ராதா அண்ணன் பொருத்தமானவர்.


12. 10. 86 அன்று அடம்பனில் நடைபெற்ற மோதலில் சாதனைபடைத்து, சரித்திரமாகிவிட்ட விக்டர் அண்ணனின் வீரமரண செய்தி கேட்டு மன்னார் மக்கள் கண்ணீர் சிந்தியவேளை, மன்னார் புலிகள் தேற்றுவார் அற்று நின்றவேளை கண்ணீர் துடைத்து, கடமை ஏற்க மீண்டும் ராதா அண்ணன் மன்னார் வருகிறார். வேதனையிலும், ஓர் நிம்மதி சேர்ந்த நெஞ்சங்களுக்கு வலுவூட்ட ராதா அண்ணன் வந்துவிட்டார்.

27. 10. 86-ல் மீண்டும் ஸ்ரீலங்கா படையெடுப்பு ஆத் [illegible] பயமுறுத்தி வைத்திருந்தார் ராதா அண்ணன். மிகவும் புத்திசாலித்தனமான நடவடிக்கைகளை மேற்கொண்டு பாரிய வெற்றிகள் ஈட்டிதந்தார் ராதா அண்ணன்

ஸ்ரீலங்கா இராணுவம் புலிகளை அழிக்க எமது மண்ணை ஆக்கிரமிக்க பல வழிகளை கையாண்டது அதில் ஒன்று. தென்னாபிரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்டதாம், கண்ணிவெடிக்கு மாட்டாதாம் இது ஸ்ரீலங்கா இராணுவத்தின் மிரட்டலும், ஒப்பாரியும். அன்று தைப் பொங்கல் திருவிழா எமது மக்கள் வீட்டு முற்றத்தில் பொங்கல் படைக்கின்றநேரம் ஓர் சத்தம். தென்னாபிரிக்கா பவல் சுக்குநூறு மக்கள் வெள்ளம் படையெடுத்தது. நல்ல அடி, சம்பல் அடி ராதா என்றால் ராதாதான். மக்கள் மனம்விட்டு, பாராட்டுகின்றனர். புலிகளின் மற்றுமொரு சாதனை.

இதே மண்ணிலே தான் 84ஆம் ஆண்டு டிசம்பர் 4ஆம் திகதி 200ற்கு மேற்பட்ட அப்பாவி மக்களை கண்மூடித்தனமாக சுட்டுக்கொன்றனர். இவர்களுக்கு இது வேணும்

(6ஆம் பக்கம் பார்க்க)




## குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி?

(நேற்றைய தொடர்ச்சி:)

குண்டு வீச்சொன்று நிகழும்போது, வெவ்வேறு ஐந்து சந்தர்ப்பங்களை எடுத்து அவற்றுக்குரிய பாதுகாப்பு வீதங்களை ஆராயும்போது அது பின்வருமாறு காணப்படுகிறது.

1. அகழியொன்றினுள் புகலிடம் தேடுவது—95% பாதுகாப்பானது.
2. கல் வீடு ஒன்றினுள் புகலிடம் தேடுவது—90% பாதுகாப்பானது.
3. தாழ் மறைப்புகளுக்குப் பின்னே படுப்பது—67% பாதுகாப்பானது.
4. திறந்த வீதியொன்றில் குப்புறப் படுப்பது—50% பாதுகாப்பானது.
5. திறந்த வீதியொன்றில் எழுந்து நிற்பது—பாதுகாப்பே கிடையாது.

இதிலிருந்து அகழி அல்லது உறுதியான கட்டிடமொன்றினுள் பாதுகாப்புத் தேடுவதே உயிரிழப்பைக் குறைப்பதற்குரிய மிகச் சிறந்த வழிமுறையாகத் தெரிகின்றது. இருப்பினும் மக்களது அன்றாட வாழ்க்கையின் வேறுபட்ட பல சந்தர்ப்பங்களை எடுத்து நோக்கும்போது, பலவற்றில் உடனடியாக அகழியையோ அல்லது உறுதியான கட்டிடமொன்றையோ தேடி ஓடுவதென்பது சாத்தியமற்றது என்பதனால், முதலில் அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் செய்யவேண்டிய செயல்முறைகள் கீழே தரப்படுகின்றன. ஒவ்வொரு செயல்முறைகளின் போதும் நீங்கள் நெருக்க [illegible]

## ஊர்சுற்றி எழுதுவது

பல கட்டுரைகள், அரசியல் விமரிசனக் கட்டுரைகள் பல எழுதியிருக்கிறேன், சிறு கதைகள் பலவும் எழுதியிருக்கிறேன். ஆனால் ஒரு பத்திரிகை நறுக்குக்கூட என்னிடம் இல்லை! ஒரு சிறு கதை வெளிவந்த பத்திரிகைகூட என்னிடம் கிடையாது!

ஒரு மனிதர் பல வருடங்களாக பல பத்திரிகைகள் சஞ்சிகைகளைச் சேகரித்து வைத்து பாதுகாத்து வருகிறார் என்றால் அதை என்னவென்று சொல்வது!

இப்படி அரும் பெரும் சாதனையைச் செய்து வருபவர் குரும்பசிட்டி கனகரத்தினம் என்ற தனி மனிதர்.

சுமார் நாற்பதாண்டு காலமாக திரு. இரா. கனகரத்தினம் ஈழத் தமிழர் சம்பந்தமான சம்பவங்களைத் தாங்கி வெளிவந்த சஞ்கிகைகள், பத்திரிகைகளைக் கவனமாகச் சேகரித்து வைத்திருக்கிறார்.

ஈழத் தமிழினத்தின் [illegible]

பெறும்; சிறிலங்கா ஜனாதிபதியின் சிறப்பு உரையும் முக்கிய நிகழ்ச்சியாக இருக்கும்.

மலையகமக்களின் பிரச்சினைகள் பற்றி தொண்டமான் காங்கிரஸ் தவிர வேறு யாரும் குரல் கொடுத்தாலும் அவர்கள் பிரச்சினை சம்பந்தமாக வேறு எவரும் நடவடிக்கை எடுக்க முற்பட்டாலும் தொண்டமான் காங்கிரசுக்குப் பிடிக்காது.

அவர்களைத் தவிர வேறுயாரும் இப்பிர[illegible]னையில் ஈடுபட்டால் அவர்கள் குழப்பக்காரர்கள், தீவிரவாதிகள் என்று நாமம் சூட்டப்படும்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தோட்டத் தொழிலாளர்களாக வாய்மூடி மௌனிகளாகச் சிறு சம்பள உயர்வுடன் திருப்திப்படுபவர்களாக இருக்க வேண்டுமென்பதே பரம்பரை பரம்பரையாகத் தோட்டத் தொழிலாளர்களுக்குத் தலைமை தாங்கும் தொழிற் சங்கங்களின் நோக்கமாகும்.

இந்த நிலை இப்போது மாறி வருகிறது. மலையக இளைஞர்கள் விழித்துக் கொண்டார்கள்.

இதனால் தான் மலையகத் தோட்டத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர் சுமார் ஒரு லட்சம் பேரைக் கட்டாயமாக நாடு கடத்துவதற்கு அரசு துடிதுடித்துக் கொண்டு நிற்கிறது.

இலங்கை - இந்திய அரசுகளும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் முத்தரப்பு பேச்சு வார்த்தை நடத்திப் பிரச்சனைக்குத் தீர்வுகாண வேண்டுமென்று கூறி விட்டார் 'தலைவர்' தொண்டமான்!

பழம்பெரும் தோட்டத் தொழிலாளர் சங்கங்களும் நிலைமையை ஆராய்ந்து கொண்டிருந்தன.

கட்டாய நாடு கடத்தலை எதிர்த்துக் குரல் கொடுத்த மலையக முன்னணி என்ற புதிய அமைப்பின் தலைவர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்

அவரை விடுதலை செய்யக் கோரி உண்ணா விரதம், வேலை நிறுத்தம் ஆகியவைகளில் ஈடுபடுவோர் தாக்கப்படுகின்றனர், கைதாகின்றனர்.

மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினை புரையோடிய புண் போன்றது என்று இனியும் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

மலையகத் தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களும் இளைஞர்களும் யாருமற்ற அநாதைகளல்லர்; அவர்களை எதுவும் செய்யலாம் என்று சிறிலங்கா அரசு நினைத்து இஷ்டம் போல் ஆட்டம் போட அனுமதிக்க முடியாது.

அரசையும் அதன் கைக் கூலிகளையும் தட்டிக் கேட்க ஆளிருக்கிறது என்பதை உணர்த்தவே நாளை தமிழீழமெங்கும் நடைபெறும் பூரண ஹர்த்தால். நாளைய ஹர்த்தாலின் வெற்றி அரசாங்கத்தின் கண்களைத் திறக்கச் செய்ய வேண்டும்.

# வெங்காயம் தட்டுப்பாடு மேலதிகமாக இறக்குமதி

(கொழும்பு)

வெங்காயத்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை போக்குவதற்கு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேசமயம் கிலோரூ, 17.50 சதமாக விற்கப்பட வேண்டிய பெரிய வெங்காயத்தை அதிக விலைக்கு தனியார் கடைகளுக்கு விற்றது தொடர்பாக கூ. மொ. விற்பனை நிலைய அதிகாரிஒருவர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பருப்பும் இறக்குமதி செய்யபடவுள்ளது. பெரியவெங்காயமும் மேலும் இறக்குமதி செய்யப்படவுள்ளது.

கூட்டுறவு மொத்த விற்பனைநிலையகளஞ்சிய சாலைகளில் உள்ள வெங்காயத்தை தனியார் கடைகளுக்கு விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

2. கல் வீடு ஒன்றினுள் புகலிடம் தேடுவது—[illegible] பாதுகாப்பானது.
3. தாழ் மறைப்புகளுக்குப் பின்னே படுப்பது—67% பாதுகாப்பானது.
4. திறந்த வீதியொன்றில் குப்புறப் படுப்பது—50% பாதுகாப்பானது.
5. திறந்த வீதியொன்றில் எழுந்து நிற்பது—பாதுகாப்பே கிடையாது.

இதிலிருந்து அகழி அல்லது உறுதியான கட்டிடமொன்றினுள் பாதுகாப்புத் தேடுவதே உயிரிழப்பைக் குறைப்பதற்குரிய மிகச் சிறந்த வழிமுறையாகத் தெரிகின்றது. இருப்பினும் மக்களது அன்றாட வாழ்க்கையின் வேறுபட்ட பல சந்தர்ப்பங்களை எடுத்து நோக்கும் போது, பலவற்றில் உடனடியாக அகழியையோ அல்லது உறுதியான கட்டிடமொன்றையோ தேடி ஓடுவதென்பது சாத்தியமற்றது என்பதனால், முதலில் அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் செய்யவேண்டிய செயல்முறைகள் கீழே தரப்படுகின்றன. ஒவ்வொரு செயல்முறைகளின் போதும் நீங்கள் நெருக்கமாக இராது தூரத் தூர விலகி இருக்கவேண்டுமென்பது மிக முக்கியமானதாகும்.

### திறந்த வெளியில் அல்லது தெருவில் உள்ளபோது ......

அருகில் பாதுகாப்புக்குரிய விசேட அமைப்புக்கள் எதுவும் இல்லாத இச்சந்தர்ப்பங்களில் அவற்றினை நோக்கி தொலை தூரங்களுக்கு ஓட முயற்சிக்க வேண்டாம். நீங்கள் செய்ய வேண்டியது அவ்விடத்திலேயே குப்புற விழுந்து படுப்பதேயாகும். தொடர்ச்சியான தாக்குதல்கள் இடம்பெறுமாயின், ஒரு தாக்குதலுக்கும், அடுத்த தாக்குதலுக்கும் இடைப்பட்ட நேரத்தில், அருகில் உள்ள பள்ளங்களினுள்ளோ அல்லது நீர் வடிந்து செல்வதற்குரிய வடிகால்களினுள்ளோ உருண்டு சென்று விடுங்கள். அது உங்களுக்குக் கூடியளவு பாதுகாப்பைத் தரக்கூடியது.

குப்புறப் படுக்கும்போது, நெஞ்சுப் பகுதியை நிலத்தில் இருந்து சற்றே மேலே தூக்கியவாறு, முழங்கைகளால் தாங்கிக் கொள்ளுங்கள். காதுகளைப் பருத்தித் துணித்துண்டுகளினால் அடைத்து விடுங்கள். அது இல்லாவிடின் உங்கள் வேட்டியோ, சேலையோ, சட்டையோ எதுவாயினும் ஒன்றினது தலைப்புகளினால் நன்கு அடைத்து விடுங்கள். உருட்டிய கைக்குட்டை அல்லது உடைகளின் ஒரு பகுதியை பற்களுக்கிடையில் இறுகக் கடித்துக் கொள்ளுங்கள். இவற்றின் மூலம் வெடிப்பதிர்வினால், செவிப்பறை மென்சவ்வு பாதிப்படைவதோ அல்லது நாக்கு கடிபடுவதோ தவிர்க்கப்படும். விமான தாக்குதலின்போது திறந்த வெளிகளில் இருந்து ஒருபோதும் மேலே பார்க்காதீர்கள். ஏனெனில் வேறெவற்றையும் விட மனித முகங்கள் இலகுவாக அடையாளம் காணக்கூடியனவாகும்.

### பூட்டிய கட்டிடமொன்றின் அருகில் உள்ளபோது...

கட்டிடத்தின் வெளிச் சுவருக்கு அருகிலோ அல்லது கதவு வழிகள், வேறு உள்நுழை வழிகள் (Arch ways) போன்றவற்றின் அருகிலோ நிற்பது பாதுகாப்பானதாகும். சுவர்களுக்கு அருகில் நிற்கும் போது, அவற்றுடன் ஒட்டினாற் போல சாய்ந்தவாறு நிற்கக்கூடாது.

கட்டிடத்தினுடைய அறையொன்றினுள், ஜன்னல்கள் ஏதுமற்ற, வெளிச் சூழலுடன் தொடர்பில்லாத சுவரொன்றினைத் தெரிவுசெய்து அதன் அருகே நிற்கவும். ஆனால் கதவு அல்லது ஐன்னல்கள் போன்றவற்றின் நேரே நிற்கவேண்டாம். உடைந்து சிதறும் கண்ணாடித் துண்டுகள் ஆபத்தானவை. இவற்றைத் தவிர்ப்பதற்காகக் கண்ணாடி ஜன்னல், கதவுகளில் இருந்து விலகி சுவர் திருப்பங்களிலே நிற்பதே சிறந்த வழியாகும்.

### புகையிரதம் ஒன்றில் உள்ளபோது......

உடனடியாக இருக்கைகளின் அடியில் தவழ்ந்து சென்று விடுங்கள். புகையிரதம் நின்று கொண்டிருக்குமாயின் அதன் அடியில் கூட சென்றுவிடுதல் மேலும் பாதுகாப்பானதாகும். ஜன்னல்களினூடாக எட்டிப் பார்த்தலோ அன்றி வெளியே குதித்து ஓடுதலோ நிச்சயமாகத் தவிர்க்கப்பட வேண்டியன. இரவு நேரமாயின் உடனடியாக புகையிரத விளக்குகளை அணைத்தல் புத்திசாலித்தனமானதாகும்.

(தொடரும்)

யல் அறிவுடன் இராணுவ தொழில் நுட்பங்களிலும் கை தேர்ந்தவர். ஆங்கில மொழியில் அழகாகப் பேசுவார், சிங்கள மொழியும் சரளமாக பேசக்கூடியவர். தனதுஅபார திறமையினால் மூத்த உறுப்பினர்களுக்கு இணையாக நின்றவர். தலைவர் மீது மிகுந்த பற்றும், பாசமும் கொண்டவர். இயக்கத்தில், தோழர்களிடத்தில்உயிரையே வைத்திருந்தவர். தமிழ் மக்கள் படுகின்ற வேதனைகளை ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் காட்டுமிராண்டி தனங்களை கண்டு கண் சிவந்து நிற்பார். உயிருடன் இருக்கும் வரை எம் இனத்தின் விடுதலைக்காக போராடுவோம். மக்களுக்காக மரணிப்பதை நாம் மகிழ்ச்சியோடு ஏற்போம். கண்டபடி நடமாடும் இவனுக்கு (ஸ்ரீலங்கா இராணுவம்) நல்ல அடி போடணும் ஐசே. என்றெல்லாம் சமயத்தில் தத்துவம் பேசுவார். வாய்ச்

12. 10. 86 அன்று அடம்பனில் நடைபெற்ற மோதலில் சாதனைபடைத்து, சரித்திரமாகிவிட்ட விக்டர் அண்ணனின் வீரமரண செய்தி கேட்டு மன்னார் மக்கள் கண்ணீர் சிந்தியவேளை, மன்னார் புலிகள் தேற்றுவார் அற்று நின்றவேளை கண்ணீர் துடைத்து, கடமை ஏற்க மீண்டும் ராதா அண்ணன் மன்னார் வருகிறார். வேதனையிலும், ஓர் நிம்மதி சேர்ந்த நெஞ்சங்களுக்கு வலுவூட்ட ராதா அண்ணன் வந்துவிட்டார்.
27. 10. 86-ல் மீண்டும் ஸ்ரீலங்கா படையெடுப்பு ஆத்திரம் மிகுந்த யுத்தம் குறுகிய நேர புயல் பாய்ச்சல், பின்னர் பதுங்கிக் கொண்டோம். வெட்டி வீழ்த்த வந்தவன் வெறுங்கையுடன் திரும்பிச் செல்கிறான். ராதா அண்ணனின் யுத்த தந்திரத்திற்கு ஒரு 'ஜே' ஸ்ரீலங்கா இராணுவத்தை உடல், உள ரீதியில்

# கல்வி அதிகாரிகள் கொத்தணி அதிபர் கவனிப்பது இல்லையா?

ஆசிரியர்,
'ஈழநாதம்'

எமது கிராமம் தனங்கிளப்பு. மிகவும் பின்தங்கிய கிராமமும், வறிய கிராமமும் ஆகும். இப்பின்தங்கிய கிராமத்திலுள்ள யா / தனங்கிளப்பு அ. த. க. பாடசாலை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. பின்தங்கிய கிராமங்கள் முன்னேற்றப்பட்டுச் செல்லும் இவ்வேளையில் பின் தங்கிய பாடசாலைக்கென்று பின்தங்கிய அதிபரையும் போட்டு மேலும் பின்னடையச் செய்வதன் நோக்கம் என்ன? பாடசாலை நேரத்துக்குப் பிந்திவந்து முந்திச் செல்லும் அதிபர்களையே இப்பாடசாலைக்குத் தொடர்ந்து போடும் மர்மம் என்ன? பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளையின் ஊராக இருந்தும் முன்னேற்ற முயலாத அதிபரும், கல்வித்திணைக்களமும் எத்தனையோ கல்வி அதிகாரிகள் வந்து போயும் எதுவித நடவடிக்கையும் எடுக்காதது ஏன்?

இப்போது இப்பாடசாலையில் எண்பது பிள்ளைகளுக்கு மேலாகப் படிக்கிறார்கள். அதிபர் உட்பட நான்கு ஆசிரியர்கள் படிப்பிக்கிறார்கள். அதிபர் ஆங்கிலம் மட்டும் தான் படிப்பிப்பது. ஆனால் இதுவரை ஆங்கிலம் படிப்பித்ததாகத் தெரியவில்லை எனப் பெற்றோர் அங்கலாய்க்கின்றனர். வேறு பாடசாலைக்கு விடமுடியாத நிலையிலுள்ள பெற்றோரேபிள்ளைகளை இப்பாடசாலைக்கு அனுப்புகிறார்கள். புதிய ஆசிரியர்கள் அதிபர் வர முதல் ஆங்கிலம் சொல்லிக் கொடுத்ததாகவும், இப்போது அதுவும் இல்லையாம். ஆண்டு 5 வரை வகுப்புக்கள் இருந்தும் அதிபரை விட்டு மூவரும் ஏனைய வகுப்புக்களைக் கவனிப்பதால் மிகுந்த சிரமத்திற்குள்ளாவதை அவதானிக்க முடிகிறது. அதிலும் ஒருவர் ஓய்வில் செல்லவுள்ளார். ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவர் படிப்பில்லாது வீடு செல்வதையும் அவதானிக்க முடிகிறது.

## மக்கள் மடல்

மேலும் பாடசாலைக் கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளது. தரையில் கிடங்குகள் பல காணப்படுவதையும், அவற்றை ஆசிரியர்களும் மாணவர்களும் களிமண்ணினால் அடைத்திருப்பதையும் காணமுடிகிறது. தண்ணீர் வசதி கிடையாது. இவ்வாறு பல குறைகள் காணப்படுகின்றது. இவற்றை நீக்கி பாடசாலை திறமையாகச் செயற்படவும், மாணவர்களின் கல்வி சீரடையவும் கல்வித் திணைக்களம் ஆவன செய்யுமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன். எண்பது பிள்ளைகளின் பெற்றோர்களின் விருப்பத்திற்காகவும் கிராமத்தின் முன்னேற்றத்திற்காகவும் இக்கடிதத்தை அனுப்பியுள்ளேன்.

— க. இரத்தினம்
தனங்கிளப்பு,
சாவகச்சேரி.

காத்து வருகிறார் என்றால் அதை என்னவென்று சொல்வது!

இப்படி அரும் பெரும் சாதனையைச் செய்து வருபவர் குரும்பசிட்டி கனகரத்தினம் என்ற தனி மனிதர்.

சுமார் நாற்பதாண்டு காலமாக திரு. இரா. கனகரத்தினம் ஈழத் தமிழர் சம்பந்தமான சம்பவங்களைத் தாங்கி வெளிவந்த சஞ்சிகைகள், பத்திரிகைகளைக் கவனமாகச் சேகரித்து வைத்திருக்கிறார்.

ஈழத் தமிழினத்தின் அரசியல் பொருளாதார சமூக கலாசார வரலாற்றை திரு. கனகரத்தினம் பத்திரிகை நறுக்குகளாக தேதி. மாதம் ஆண்டு வாரியாகப் பவித்திரமாகப் பேணிப் பாதுகாத்து வைத்திருக்கிறார்.

புகழ்பெற்ற ஆராய்ச்சியாளர்கள் பலருடைய கட்டுரைகள் தனித்தனியாக வெட்டி ஒட்டிப் புத்தகங்களாகப் பேணி வைத்திருக்கிறார்.

உலகில் பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழர்களைப் பற்றி எடுத்துக் கூறும் ஏடுகளை அவர் சேர்த்து வைத்திருக்கிறார்.

நமது நாட்டில் நடைபெறும் தமிழ் மாநாடுகள், விழாக்கள், ஆகியவைகளில் தமது அரும் பெரும் சேகரிப்புக்களை கண்காட்சிக்கு வைத்து மற்றவர்களும் பயனடைவதற்கு உதவியும் ஊக்கமும் அளிக்கிறார்.

அன்றாடம் படிக்கும் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் கூட ஆமிக்காரர் சோதனை போட வாறாங்கள் என்று தூக்கிக் குப்பையில் போட்டும் நெருப்பில் எரித்தும் பின்னர் அநியாயமாய்ப் போச்சே என்று இன்றுங் கவலைப்படுபவர் பலர்.

திரு. கனகரத்தினம் ஸ்ரீலங்கா இராணுவமும் இந்தியப் படையும் அட்டகாசம் புரிந்த குரும்பசிட்டியிலேயே இவற்றைச் சேகரித்து வைத்திருக்கிறாரென்றால் அதுபெரும் சாதனை மட்டுமல்ல பெரும் சக்தியுமாகும்.

இன்று அவரது அரும் பெரும் கண்காட்சியாக வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் இடம் பெறுகிறது.

வாழ்க வளர்க அவர் நற்பணி!

Registered as a Nwes Paper at the G. P. O

ஈழநாதம்

# 6-வது சட்ட நீக்கம்; ஈரோஸ் முயற்சி!

## இழுத்தடித்தால் எம். பீக்கள் பதவி துறப்பார்கள்

(கொழும்பு)

**''தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு மாறான அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு நாம் பாராளுமன்றத்தில் பிரேரணை கொண்டு வருவோம். அரசாங்கம் இதை இழுத்தடித்தாலும் சரி அல்லது பிரேரணையை ஏற்று நிறைவேற்றா விட்டாலும் நாம் பாராளுமன்றத்தில் தொடர்ந்திருக்க மாட்டோம். பாராளுமன்றத்துக்கு முண்டு கொடுத்திருக்க மாட்டோம்.''**

இவ்வாறு ஈழவர் ஜனநாயக முன்னணி(ஈரோஸ்)யின் யாழ். மாவட்ட எம் பி.திரு இ.பரராஜசிங்கம் நேற்று ஈழநாதம் பத்திரிகைக்கு விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். அவரது அறிக்கை வருமாறு.

தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை நசுக்கக் கூடிய ஆறாவது திருத்தச் சட்டமானது அகற்றப்படுவதன்மூலமே தமிழ் மக்கள் நாட்டில் சுதந்திரமாக வாழ முடியும். ஏனெனில் இச்சட்டமானது நாட்டில் வாழும் அனைத்து மக்களினதும் பிரதிநிதித்துவத்தைத் தடுக்கும் சட்டம் குறிப்பாக தமிழ்பேசும் மக்களைப் பாதிக்கும் ஒன்றாகும்.

1983ஆம் ஆண்டு இந்தச் சட்டத்தினை தற்பொழுது இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கொண்டு வந்த பொழுது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூடக் கண்டித்ததுடன் இது தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கும் சட்டம் எனக் குறிப்பிட்டது நினைவு கூரத் தக்கது.

நாம் கடந்த ஒரு வருடமாக இச் சட்ட மூலத்தை அகற்றும்படி பல முறை வற்புறுத்தி வந்துள்ளோம். இதனை அரசு பெரிதுபடுத்தியதாகத் தெரியவில்லை. ஆனால் தற்பொழுது இச் சட்ட மூலமே நாட்டில் மீண்டும் ஓர் குழப்ப நிலையை ஏற்படுத்தியுள்ளது.

அரசின் இந்த இழுத்தடிக்கும் நோக்கினை தமிழ் மக்கள் வெறுக்கத் தொடங்கியுள்ளனர். நாம் கடந்த பெப்ரவரி மாதமே பாராளுமன்றத்தை விட்டு வெளியேற முடிவு செய்தோம். காரணம் ஆறாவது திருத்தச் சட்டம் எடுக்கப்படவில்லை என்று ஆனால் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு எமது வாக்குகளும் தேவைப்படலாம் என்ற நோக்குடனேயே தொடர்ந்தும் பாராளுமன்றத்தில் இருந்து வருகின்றோம். இப்படியான எமது நோக்கத்தினை எமது பலவீனமாகக் கருதினால் தொடர்ந்து நடக்கவிருக்கும் விளைவுகளுக்கு அரசுபொறுப்பேற்க வேண்டி வரும். நாம் மிக விரைவில் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்கக் கோரும் சட்ட மூலத்தைக் கொண்டு வரஉள்ளோம். இப்பிரேரணைக்கு திரும்பவும் பாராளுமன்றத்தில் இழுத்தடிப்புநிலைஏற்பட்டாலும் இச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பங்கு பெறமுடியாது போனாலும் பாராளுமன்றத்தை விட்டு வெளியேறுவோம் அதாவது இராஜினாமாச் செய்வோம்.

இதையே எமது மக்களும் எதிர்பார்க்கின்றனர். பாராளுமன்றத்தில் தொடர்ந்து முண்டு கொடுத்துக் கொண்டு கடந்த காலத்தில் தலைவர்கள் விட்ட அதே தவறினை நாமும் தொடர்ந்து விடத் தயாராக இல்லை என்பதனை தென் இலங்கை அரசியற் கட்சிகளுக்கும் குறிப்பாக அரசாங்கத்துக்கும் தெரிவிக்க விரும்புகின்றோம் எனவும் குறிப்பிட்டார்.

### முள்ளிக்குளத்தில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வார்கள்.

இந்த விழாவையொட்டி உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், நாடகம், நாட்டுக் கூத்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

### பாதிக்கப்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது இவ்வாறிருக்க மட்டக்களப்பு மாவட்டத்தில் இது தொடர்பான விண்ணப்பங்கள் இம் மாதம் 31 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படுமென கல்விப் பணிப்பாளர் திரு. கு சோமசுந்தரம் தெரிவித்தார். (37)

### நாளைய

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம். அந்தவகையில் நாளை விடுதலைப்புலிகளால் வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஹர்த்தால், பகிஷ்கரிப்பு, மற்றும்

## புங்குடுதீவு மக்களுக்கு இலவச குடிநீர் விநியோகம்

(வேலணை)

புங்குடுதீவு மக்களுக்கு இலவசமாக குடிதண்ணீரை வழங்குவதற்கு யாழ்மாவட்ட சர்வோதய இயக்க அமைப்பாளர் முன்வந்திருக்கின்றார்

புங்குடுதீவுப் பகுதியில்நிலவி வருகின்ற வரட்சியால் மக்களும் கால்நடைகளும் குடிப்பதற்கு குடிநீர் இன்றி பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர் என வேல[illegible] காட்டிய தையடுத்தே அவர்கள் இவ்வுதவியைச் செய்ய முன்வந்துள்ளார்

இலவச குடிநீர் திட்டத்திற்கென பவுசரை புங்குடுதீவு மக்களுக்கு கொடுத்து அதன் மூலம் வேலணை சாட்டி என்ற இடத்தில் குடிநீரை எடுத்து வந்து புங்குடுதீவிற்கு கொண்டு சென்று அங்குள்ள கிராம சேவை அலுவலர்களினது கண்காணிப்பின் பேரில் மட்[illegible]

### பேசாலையில் மீன்பிடிப் பயிற்சி நிலையம்

மன்னார் மாவட்டத்திலுள்ள பேசாலை கிராமத்தில் மீன்பிடிப் பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு சுவிற்சலாந்து அரசு 3 கோடி 40 இலட்சம்ரூபாவை வழங்கியுள்ளது. இதற்கான வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவாம்.

## பொதுக்கூட்டம் திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

21ஆம் திகதி நடைபெறவிருந்த அரசாங்க எழுதுவினைஞர் பொதுக் கூட்டம் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என சங்கத்தின் பொதுச் செயலாளர் செ. பரராஜசிங்கம் அறிவித்துள்ளார்,

### மதவாச்சி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிஸங்க திசநாயக ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

தமிழ்,சிங்கள, முஸ்லிம் மக்களுடன் சுமார் 50பிக்குமாரும் இந்தப் பாதயாத்திரையில் பங்குகொள்ள இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பிற்பகல், வவுனியா நகரில் அமைந்துள்ள கந்தசாமிகோயிலருகில் வைத்து தமிழ் மக்களுடனான சமாதானக் கூட்டம் ஒன்று நடைபெறும் என்றும் பின்னர் இன்று மாலை 4-30

### குரோ[illegible]

(1ஆம் [illegible]ர்ச்சி)

இருக்கவேண்டும். தனித்துவமான ஒருகலை, கலாசாரம் இருக்கவேண்டும்.அந்த இனம் வாழ்ந்ததற்கு ஒரு நீண்ட வரலாறு இருக்கவேண்டும். என்னப அடிப்படையான அம்சங்களாக அமைகின்றன.

இவற்றை ஒரு தேசிய இனமாக ஏற்கும் உரிமை இருக்கிறது. எனவே இவர்கள் அடங்கிய ஒரு தேசிய இனத்திற்குப் பிரிந்து போகும் உரிமையும் இருக்கவேண்டும்.

இங்கே சில சக்திகளை ஏவி விட்டு எம்மை அழிக்க முயன்றது இந்திய அமைதிப்படை. ஆனால், இறுதியில் அது பாரிய இழப்புகளுடன் பின்வாங்கி ஓடிவிட்டது.

நாம் ஒரு தேசிய இனமாக வாழும் அதேசமயம் ஒரு பலம் வாய்ந்த படை அணியையும் கொண்டிருக்கிறோம். எனவே எமது உரிமைகளில் எதனையும் விட்டுக் கொடுத்து அரசுடன் பேசும் நிலையில் நாம் இல்லை.

தமிழ்மக்களும் முஸ்லிம் மக்களும் பெரும்பான்மையினராக வாழும் கிழக்கு மாகாணத்தில் 50 வீதத்திற்கு மேற்பட்ட காணிகள் சிங்கள மக்களின் கைகளில் இருக்கின்றன.

தமிழர்களும்- முஸ்லீம்களும் ஒற்றுமையாக வாழ்ந்திருந்தால் இதனைத் தடுத்திருக்க முடியும். இனியாவது, இவ்விரு இனங்களும் ஒற்றுமையாக வாழ்ந்து, எமது உரிமைகளுக்காக விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியில் இணைந்து செயலாற்ற முன்வரவேண்டும்'' என அவர் கூறினார்.

### ஜெர்லிஸ்ரார்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி 30 ஓவர்களில் 199 ஓட்டங்களைப்பெற்றது. பதிலளித்து ஆடிய ஓல்கோல்ட் அணி 28.3 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 145 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

## பரீட்சை பின்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இராமநாதன் நுண் கலைக் கழக மூன்றாம் வருட மாணவர்களுக்குநாளை21 ஆம்திகதி திங்கட்கிழமை நடைபெறவிருந்த சாஸ்திரப்பரீட்சை 25ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்குப் பின்போடப்பட்டுள்ளது.

23,24ஆம்திகதிகளில் நடைபெறவிருக்கும் பரீட்சைகள் வழமை போல் நடைபெறும் என்று யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

### கொழும்பு . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

புலிகளுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்தி, அப்பேச்சுக்களுக்கு முக்கியத்துவம் அளித்துவந்ததால் சர்வகட்சி மாநாட்டில் பார்வையாளர் அந்தஸ்தில் மட்டும் பங்குபற்ற விடுதலைப் புலிகள் இணங்கினர்.

எனினும் சமீபகாலமாக, குறிப்பாகஇந்திய இராணுவம் வாபஸ் பெறப்பட்டதிலிருந்து அரசின்அணுகுமுறையில்திடீர் மாற்றங்கள் ஏற்பட்டு வருவது விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு சந்தேகத்தையும் சினத்தையும் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

மாகாண சபையைக் கலைத்து தேர்தல் நடத்த வேண்டுமென்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கையை அரசாங்கம் தட்டிக்கழிப்பதோடு ஆறாவது சட்டத்திருத்தத்தை நீக்கிவிடுவதிலும் தயக்கம் காட்டி வருகிறது. பேச்சுக்களை இழுத்தடித்து தமிழீழத்தில் அரசியல் சூன்ய நிலையை அரசு திட்டமிட்டு நீடிப்பதாகவும் புலிகள் வட்டாரங்கள்சந்தேகிக்கின்றனஇதுமாத்திரமின்றி இந்திய ஆக்கிரமிப்பிற்கு துணைநின்று தமிழ் பேசும் மக்களுக்கு தாங்கொணா இன்னல்களை இழைத்துவந்த குழுக்களை அரவணைத்துக்கொள்ளஅரசு எடுக்கும் நடவடிக்கைகள் புலிகள் இயக்கத்திற்கும் தமிழீழ மக்களுக்கும் ஆத்திரத்தையும் சந்தேகத்தையும் உண்டு பண்ணியுள்ளது. தமிழ் பேசும் மக்களின் இலட்சியத்தை கொச்சைப் படுத்தும் வகையில் தனியரசுப் பிரகடனம் செய்து பின்னர் நாடு கடத்தப்பட்ட இயக்கமாகிய ஈழமக்கள்புரட்சிகர விடுதலை முன்னணியுடன் உத்தியோக பூர்வமாக பேச்சுக்களை நடத்திய அதற்கு பிரமாத விளம்பரம் கொடுத்ததும் புலி வட்டாரங்களில் சினத்தைஏற்படுத்தியுள்ளது.

தமிழ் இயக்கங்கள் ஒன்றுபட வேண்டுமென ஆலோசனை வழங்கி, சர்வகட்சி மாநாட்டை ஒரு பொது அரங்காக வைத்து, சகல தமிழ்க் குழுக்களும் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிக்க வேண்டுமென்றும் சமீபகாலமாக' அரசு கூறிவருகிறது. புலிகளுடன் நடத்தி வந்த தனிப்பட்ட பேச்சுக்கு முக்கியத்துவம் கொடாது சர்வகட்சி மாநாட்டுக்கு முக்கியத்துவம் வழங்கி, தமிழ் பேசும் மக்களால் அந்நியமாக்கப்பட்ட அனைத்துக் குழுக்களையும் ஒரே அரங்கில் அரவணைத்து, தமிழ் தேசிய பிரச்சினையைக் குழப்புவதற்கும், கால எல்லையற்று நீடிப்பதற்கும் அரசு திட்டமிட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். அரசாங்கத்தின் இந்தத் தவறான அணுகுமுறைகளை ஆட்சேபித்தே விடுதலைப் புலிகள் சர்வகட்சி மாநாட்டை பகிஷ்கரித்துள்ளனர் என புலிகள் உயர்மட்ட வட்டார்ரங்களில் பேசப்படுகிறது,

## திருடனை ஊர்வலமாக கொண்டுவந்தனர்

பெரியகல்லாறு உதயபுரத்தில் நள்ளிரவு நேரம் ஓடு பிரித்து கடையினுள் புகுந்த திருடன் கையும் மெய்யுமாகப் பிடிபட்டு அவ்வூரின் வீதிகளில் ஊர்வலமாக அழைத்துவரப் பட்டான் பின்னர் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டான்.

இவர் திருடிய சீனி,பால் மா போன்ற பொருட்களும் ஊர்வலத்தில் எடுத்துவரப் பட்டன.

## 20 . 05 . 89 இல் முள்ளிக்குளத்தில் வீரமரணமடைந்த போராளிகளுக்கு எமது வீரவணக்கங்கள்

| | | | | ஜனனம் | வீரமரணம் |
|---|---|---|---|---|---|
| (1) | கப்டன் | குலம் | நல்லூர் - பூநகரி | 06 - 12 - 69 | 20 - 05 - 89 |
| (2) | கப்டன் | சபேசன் | பரிகாரி கண்டல் | 26 - 12 - 70 | ,, |
| (3) | கப்டன் | புதுமை | புறவாட்டி, அடம்பன் | 05 - 05 - 66 | ,, |
| (4) | கப்டன் | அமலன் | காத்தாங்குளம் | 10 - 07 - 66 | ,, |
| (5) | லெப்டினன் | மாக்ஸ் | தட்சனா மருதமடு | 06 - 06 - 70 | ,, |
| (6) | லெப்டினன் | நாயுடு | பள்ளக்கமம் | 02 - 10 - 70 | ,, |
| (7) | 2ம் லெப்டினன் | சிவம் | களிமோட்டை | 30 - 05 - 66 | ,, |
| (8) | 2ம் லெப்டினன் | சுரேஸ் | யாழ். திருநெல்வேலி | 17 - 05 - 72 | ,, |
| (9) | 2ம் லெப்டினன் | கர்ணன் | நல்லூர், பூநகரி | 17 - 05 - 72 | ,, |

# புங்குடுதீவு மக்களுக்கு இலவச குடிநீர் விநியோகம்

(வேலணை)

புங்குடுதீவு மக்களுக்கு இலவசமாக குடிதண்ணீரை வழங்குவதற்கு யாழ்மாவட்ட சர்வோதய இயக்க அமைப்பாளர் முன்வந்திருக்கின்றார்

புங்குடுதீவுப் பகுதியில்நிலவி வருகின்ற வரட்சியால் மக்களும் கால்நடைகளும் குடிப்பதற்கு குடிநீர் இன்றி பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர் என வேலணை உதவி அரசாங்க அதிபர் அலுவலக நிர்வாக அதிகாரியான திரு. என். தனபாலசிங்கம் வடமாகாண சர்வோதய அமைப்பாளருக்குசுட்டிக் காட்டிய தையடுத்தே அவர்கள் இவ்வுதவியைச் செய்ய முன்வந்துள்ளார்

இலவச குடிநீர் திட்டத்திற்கென பவுசரை புங்குடுதீவு மக்களுக்கு கொடுத்து அதன் மூலம் வேலணை சாட்டி என்ற இடத்தில் குடிநீரை எடுத்து வந்து புங்குடுதீவிற்கு கொண்டு சென்று அங்குள்ள கிராம சேவை அலுவலர்களினது கண்காணிப்பின் பேரில் மட்டுப்படுத்தப் பட்ட தொட்டிகளில் குடிநீரை தேக்கி வைத்து விநியோகிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (14)

## எங்கள் நெஞ்சில் ...

(5ஆம் பக்கத்தொடர்ச்சி)

இன்னமும் வேணும். மக்கள் மனதில் ஓர் துணிவு நம்பிக்கை பிறக்கிறது. ஐயா, ராஜீ. அசோக், நோயல் இவர்களை ஒவ்வொருவராக அழைத்து மகிழ்ச்சிக் கடலில் மிதக்கிறார் ராதா அண்ணன் ஐசே ராஜீ பாத்திரா விளையாடடை, அசோக் கவனம் ஐசே! நோயல் நீர் மன்னாரில் முள்ளந்தண்டு என்றெல்லாம் ஒவ்வொருவர முக்கியத்துவத்தையும்உணர்ந்து, உரமூட்டி செயற்படுவார்.

1987 மாசி 7ஆம் திகதி ஸ்ரீலங்கா இராணுவம மீண்டும் பாரிய சுற்றிவளைப்பை மேற்கொண்டு படையெடுத்தது, பலத்த மோதலில் நோயல வீரமரணமடைந்த கசப்பான செய்தியை ராதா அண்ணன் மனவருததத்துடன் ரோக்கியில் அறிவிக்கிறார். எதிரி இராணுவம் பலம் கொண்டு தாக்கும்போது கெரில்லா படை சமயத்தில்பின்வாங்கி அவதானிப்பது கொரில்லா யுத்தநடை முறையில் ஒன்று அது அன்று எம்மால் மேற்கொள்ளபபட்டதும் எமக்கு திரந்தரமான, உறுதியான. தளம் ஒன்று தேவை எம்மை பாதுகாக்க, பலப்படுத்த உடனடி ஏறபாடுகளை மேற்கொண்டு வேலைகள் நடைபெற்றன.

தமிழீழ பிரதேசங்களில் சகல மாவட்டங்களிலும் இது போன்ற ஸ்ரீலங்கா படையின் பாரிய யுதத நடவடிக்கை மேற்கொளளப்பட்டுவந்தது. அப்போது யாழ் தளபதி கிட்டண்ணாவிடமிருந்து தகவல் வந்தது. ராதா அண்ணன் தலைமையில் யாழ்ப்பாணம் நோக்கி புறப்படுகிறோம். அங்கும் இராணுவத்தினரின் கற்றிவளைபபுககான ஆயத்த வேலை நடை பெற்றது. மறுகணம் யாழ் பொலிஸ் விடுதி தாக்கப்படுகிறது 8 ஸ்ரீலங்கா சிங்கள பொலிசார் கைதுசெய்யப் படுகின்றனர். கிட்டண்ணாவும், ராதா அண்ணாவும் சேர்ந்து நடாத்திய சாதனை. இதன பின்னர் துரோகி ஒருவனது கோழைச் செயலால் தளபதி கிட்டண்ணா ஒரு காலை இழக்கின்றார்.

ராதா அண்ணன் யாழ் மாவட்ட தளபதியாக தலைவரால் நியமிக்கப் படுகிறார். தொடர்ந்துகாங்கேசன் துறை காபர் வியூ இராணுவ முகாம் தகாககபபடுகிறது. மயிலியதனை இராணுவ முகாம், குரும்பசிட்டி இராணுவமுகாம் தாக்கப்பட்டு ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டு பல இராணுவம் கொன்று குவிக்கப்படடது. நிலைதடுமாறிய ஸ்ரீலங்கா அரசும், அதன் கூலிப்படைகளும் யாழ் மண்ணை யுத்த பூமி யாககினர்.

20/5/87 காலை, ஆகாய விமானத்தாக்கல்,பீரங்கி தாக்கல், ஷெல் வீச்சுகள் சகிதம் பெரும் படையுடன் புறப்பட்ட இராணுவத்தை பல முனைகளிலுமஎமது வீரர்கள் எதிர்த்து தாக்கினர். பலத்த இழப்புக்களுடன் இராணுவம் பின்வாங்கி முகாமினுள்முடங்கியது. அன்று தமிழ் மண கண்ணீரில்மூழ்கியது காரணம்எங்கள் அன்பான ராதாஅண்ணா எம் நெஞ்சில் தீபமாகி விட்டார்.

அ.சுரேஷ்
மன்னார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31- ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 20-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

இது இவ்வாறிருக்க மட்டக்களப்பு மாவட்டத்தில் இது தொடர்பான விண்ணப்பங்கள் இம் மாதம் 31 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படுமென கல்விப் பணிப்பாளர் திரு. கு சோமசுந்தரம் தெரிவித்தார். (37)

## நாளைய

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம். அந்தவகையில் நாளை விடுதலைப்புலிகளால் வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஹர்த்தால், பகிஷ்கரிப்பு, மற்றும் கதவடைப்பு நடவடிக்கைகளுக்கு எமது பூரண ஆதரவையும், ஒத்துழைப்பையும் நல்குகின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் மலையகமக்கள் தொடர்பாக இலங்கை, இந்திய அரசுகள் செய்துகொண்ட உடன்பாடுகள் எதுவும் இந்த மக்களின சம்மதத்தைப் பெற்றவையல்ல என்பதுடன், அவற்றின அமுலாக்கும் காலவரையறையும் கடந்துவிட்டது. 1964இன் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தமும், 1974இன் சிறிமா-இந்திரா ஒப்பந்தமும் காலாவதியாகி விட்டன 1987இன் இலங்கை-இந்திய உடன்படு கூட செல்லுபடியற்றதாகியுள்ள இன்றைய சூழ்நிலையில் மலையக மக்களை நாடு கடத்த எடுக்கும் முயற்சி எந்தச் சட்டவரையறைக்கும் உட்பட்டதாகக் கருதமுடியாது

## தொலைபேசி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேடு குறித்து தொலைத் தொடர்பு திணைக்களத்துக்கு பல தடவைகள் புகார்கள் தெரிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பஸ் நிலைய வட்டாரங்கள தெரிவித்தன.

## சமாதான

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளனர்.

அத்துடன் வடக்கு கிழக்குப் பகுதிக்கு1984க்கு பின்னர் போதிய சமாதான நீதிவான்களை நீதியமைச்சு நியமிக்காததும் இதற்கு ஒரு காரணமாகும்.

## தோட்டத்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் தமது உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தும் நடாத்தி வருகின்றனர்.

இதேசமயம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு.எஸ்.தொண்டமான் பொலிஸ் மாஅதிபரை சந்தித்துப் பேசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செயலாளர் செ. பரராஜசிங்கம் அறிவித்துள்ளார்,

## மதவாச்சி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிஸங்க திசநாயக ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

தமிழ்,சிங்கள, முஸ்லிம் மக்களுடன் சுமார் 50பிக்குமாரும் இந்தப் பாதயாத்திரையில் பங்குகொள்ள இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பிற்பகல், வவுனியா நகரில் அமைந்துள்ள கந்தசாமிகோயிலருகில் வைத்து தமிழ் மக்களுடனான சமாதானக் கூட்டம் ஒன்று நடைபெறும் என்றும் பின்னர் இன்று மாலை 4-30 மணியளவில் மதவாச்சி நகரத்தில் வைத்துப் பொதுக் கூட்டம் நடைபெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பொதுக்கூட்டத்தில் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் சிலர் கலந்துகொள்ளவிருக்கின்றனர் என்று நம்பகரமாகத் தெரியவருகிறது.

சமாதானத்திற்கு நாம் எதிரானவர்கள் அல்ல. ஆனால் சமாதானத்திற்கான முயற்சிகள் வெறும் பேச்சளவில் இல்லாமல் செய்கையில் இருக்க வேண்டும் என்று வவுனியா மாவட்ட விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி அரசியல பொறுப்பாளர் திரு என். தினேஷ் அண்மையில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (தி)

## மட்டக்களப்பு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமையலறை நவீனமயப்படுத்தல் லிப்ற்கள் திருத்தல், பிரேத அறை புனரமைப்பு, ஆய்வுகூட உபகரணம் கொள்வனவு என்பன அடங்கும் என்றார்.

களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 145 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இயக்கமாகிய ஈழமக்கள்புரட்சிகர விடுதலை முன்னணியுடன் உத்தியோக பூர்வமாக பேச்சுக்களை நடத்திய

புலிகள் சர்வகட்சி மாநாட்டை பகிஷ்கரித்துள்ளனர் என புலிகள் உயர்மட்ட வட்டார்ரங்களில் பேசப்படுகிறது,

## 20 . 05 . 89 இல் முள்ளிக்குளத்தில் வீரமரணமடைந்த போராளிகளுக்கு எமது வீரவணக்கங்கள்

| | | | | ஜனனம் | வீரமரணம் |
|---|---|---|---|---|---|
| (1) | கப்டன் | குலம் | நல்லூர் - பூநகரி | 06 - 12 - 69 | 20 - 05 - 89 |
| (2) | கப்டன் | சபேசன் | பரிகாரி கண்டல் | 26 - 12 - 70 | ,, |
| (3) | கப்டன் | புதுமை | புறவாட்டி, அடம்பன் | 05 - 05 - 66 | ,, |
| (4) | கப்டன் | அமலன் | காத்தாங்குளம் | 10 - 07 - 66 | ,, |
| (5) | லெப்டினன் | மாக்ஸ் | தட்சனா மருதமடு | 06 - 06 - 70 | ,, |
| (6) | லெப்டினன் | நாயுடு | பள்ளக்கமம் | 02 - 10 - 70 | ,, |
| (7) | 2ம் லெப்டினன் | சிவம் | களிமோட்டை | 30 - 05 - 66 | ,, |
| (8) | 2ம் லெப்டினன் | சுரேஸ் | யாழ். திருநெல்வேலி | 17 - 05 - 72 | ,, |
| (9) | 2ம் லெப்டினன் | கர்ணன் | நல்லூர், பூநகரி | 17 - 05 - 72 | ,, |
| (10) | வீரவேங்கை | பீற்றர் | வண்ணாகுளம் | 05 - 05 - 71 | ,, |
| (11) | வீரவேங்கை | வீமன் | சாவற்கட்டு | 10 - 05 - 71 | ,, |

தமிழீழ விடுதலைப் புலிகள்,
யாழ்- மாவட்டம்

(B 996)

## 75 வீத

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீடமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன. புனர் நிர்மாண வேலைகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

## ஒப்பந்த

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூரைவரைபூர்த்தியாக்கப்பட வேண்டும்

அக்டோபர் 1ஆம் திகதிக்கு முன்பு 2ஆம் கட்ட நிர்மாணம் முற்றாக பூர்த்தியாக்கப்படும்.

மேற்படி வேலைகளில் திருப்தி காணப்படுமாயின் மேலும் வேலைகள் தொடர அனுமதிக்கப்படுவர்.

இவ்வாண்டு டிசம்பர் மாதத்துககு முன்பு பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அரசாங்க அதிபர் கூறினார். (37)

## நீண்ட

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் பேசும் மக்கள் தங்களது நியாயபூர்வமான எதிர்ப்பை ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும், உலகுக்கும் காட்டும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

மலையக மக்கள் திட்டமிட்டு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் போதிய அதிகாரத்துடன் குடியேற்றப்பட வேண்டும். அதுவரை மலையக மக்கள் தங்கள் உரிமைகளைத் தாமே போராடிப் பெறவேண்டும்.

நாளை நடைபெறவுள்ள ஹர்த்தாலை ஒட்டி அத்தியாவசிய தேவைக்கான குடிநீர் விநியோகம், மருத்துவ சேவை, நகர சுத்தி ஆகியன பாதிக்கப்படக் கூடாதென்றும், சகல வர்த்தகர்களும் கடைகலளைப் பூட்டியும், வாகனப் போக்குவரத்து, மக்கள் நடமாட்டம் ஆகியவற்றைத் தடுத்தும் ஒத்துழைப்பு வழங்குமாறு அவ்வறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## தீவு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிசயத்துடன் பார்த்தனராயினும் பலவித அபிப்பிராயங்களை தெரிவித்தனர். தமிழ்ப் பகுதிகளில் வேவு பார்க்கும் விமானங்கள் தற்போது அடிக்கடி பறந்து திரிவதால் மேற்படி சீ-பிளேனைப் பற்றியும் மக்கள் மத்தியில்சந்தேக கருத்துக்கள் பரவியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (22)

## முதலாம் ஆண்டுநினைவஞ்சலி



ச. சத்தியசுரேஸ்
(சுரேஸ்)

ஜனனம் 1972 . 05 . 17

வீரமரணம் 1989 . 05 -20

அவனது நினைவு
துரோகிகளால் அழிக்க முடியாதது
அவனது கனவு
எந்த ஏகாதிபத்தியத்தாலும்
சிதைக்க முடியாதது
அவனது தாகம்
தமிழின விடுதலையே . . .
அவனது மூச்சு
சுதந்திர ராகம்!
வீரனே நீ
வீழ்ந்தது கதையல்ல
வரலாறு . . .
நீ : ஆயிரமாய் எழுதுவதும்
கதையல்ல . .
காலத்தின் தேவையே!

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

உற்றார், உறவினர்
நண்பர்கள்.

(B994)